Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 8.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2036 ஐப்பசி- 01 ஹிஜ்ரி 1428 ரம்ழான் 14 (18.10.2005) செவ்வாய்க்கிழமை இதழ்:18

வங்கிகள், பாடசாலைகள், அலுவலகங்கள் மற்றும் இல்லங்களுக்குத் தேவையான உருக்கு (STEEL) இரும்பு தளபாடங்கள் உங்கள்விருப்பத்துக்கு ஏற்றாற்போல் குறித்த தவணையில் தரமானதாகவும், உறுதியானதாகவும் செய்துதரப்படும். நவீன டிசைன்களில் கேற், கிறில்கள் செய்துதரப்படும்.

KKJ

Work Shop & Sales Centre

No. 11, ஐந்துசந்தி, யாழ்ப்பாணம். T.P:- 077 - 9037203

## மகிந்தவின் தெளிவற்ற நிலைப்பாடு: தனி நாடு உருவாகும் நிலை ஏற்படும்!

### எச்சரிக்கிறார் ரணில்

திருகோணமலை —


தமிழர் பிரச்சினை தொடர்பாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனது நிலைப்பாட்டை தெளிவாகத் தெரிவிக்கைவில்லையெனில், புலிகள் தனிநாட்டைப் பெற்றுக்கொள்ளும் நிலை உருவாகும் என்று ஐ.தே.க வின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க எச்சரித்துள்ளார்.

திருகோணமலை நகர் மற்றும் கிண்ணியாவில் நேற்றுமுன்தினம் தேர்தல் பிரசாரக் கூட்டங்களை ரணில் விக்கிரமசிங்க நடத்தினார்.

திருகோணமலை தனியார் பஸ் நிலையப் பகுதியில் நடைபெற்ற கூட்டத்தில் ரணில் பேசியபோதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக நாம் தெளிவான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளோம்.

ஆனால், மஹிந்த ராஜபக்ஷ இது தொடர்பான தனது நிலைப்பாட்டைத் தெளிவாகத் (12 ஆம் பக்கம் பார்க்க)



## யாழ். குடாநாட்டு தேர்தலுக்கு 65 வாகனங்கள் தேவையாம்!

### படைத்தரப்பு கோருகிறது

கொழும்பு —

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் நடவடிக்கைக்காக யாழ்ப்பாண பிரதேசத்திற்கு மட்டும் 65 வாகனங்கள் தேவையென படைத்தரப்பு கோரிக்கை விடுத்திருப்பதாக தேர்தல் திணைக்களத் தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

வடக்கு- கிழக்கு தேர்தல் நடவடிக் கைகளுக்கு தமது வாகனங்களை வழங்குவதற்கு தனியார் வாகன உரிமையாளர்கள் தயங்குவதால், அரச வாகனங்களையே இந்தப் பணியில் ஈடுபடுத்த வேண்டியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தேர்தல் நடவடிக்கைகளுக்காக சுமார் 7000 (12 ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில்

# மரண தண்டனை விதிக்கப்பட்ட மூவரையும் விடுதலை செய்ய அப்துல்கலாம் யோசனை!

புதுடெல்கி —

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் கைதாகி சிறைவாசம் அனுபவித்துவரும் முருகன், பேரறிவாளன், சின்ன சாந்தன் ஆகியோருக்கு விதிக்கப்பட்டுள்ள மரணதண்டனையை மறுபரிசீலனை செய்யும்படி இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம் இந்திய அரசிடம் கேட்டுள்ளார்.

இந்த வழக்கில் முருகன், பேரறிவாளன், சின்ன சாந்தன் ஆகியோர் கடந்த 14 வருடங்களாக சிறைவாசம் அனுபவித்து வருகின்றனர். மூன்று பேரும் இந்திய ஜனாதிபதிக்கு கருணை மனுக்களை அனுப்பியுள்ளனர்.

இவர்களுடன் இந்தியா முழுவதும் மொத்தம் மரண தண்டனை விதிக்கப்பட்ட 50 பேரும் இந்திய ஜனாதிபதிக்கு கருணை மனுக்களை அனுப்பியுள்ளனர்.

1993 ஆம் ஆண்டு 21 பொலிஸார் இறந்த வழக்கில் சத்திய மங்கலம் வீரப்பன் குழுவைச் சேர்ந்தவர்கள் எனக் கூறப்படும் ஞானப்பிரகாசம், மாதையா, (12 ஆம் பக்கம் பார்க்க)



## 12 நீர்த்தேக்கங்களை தகர்க்க விடுதலைப் புலிகள் திட்டமாம்!

### கதைகட்டுகிறது கர்நாடக அரசு

பெங்களூர் —

இந்தியாவில் கர்நாடக மாநிலத்திலுள்ள 12 நீர்த்தேக்கங்களுக்கு விடுதலைப் புலிகளின் தாக்குதல் அச்சுறுத்தல் இருப்பதாகக் கூறி கர்நாடக அரசு பாதுகாப்பைப் பலப்படுத்தியுள்ளது.

கர்நாடக நிர்வாகத்துறை அமைச்சர் மல்லிகார்ஜுனா கார்கே தலைமையில் நடைபெற்ற உயர்மட்டக் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இந்த உயர்மட்டக் கூட்டத்தில் நீர்ப்பாசன மற்றும் உள்துறை பிரதம செயலாளர்கள், பொலிஸ் இயக்குநர் பி.எஸ்.சியால், (12 ஆம் பக்கம் பார்க்க)

# 12 நீர்த்தேக்கங்களை தகர்க்க விடுதலைப் புலிகள் திட்டமாம்!

## கதைகட்டுகிறது கர்நாடக அரசு

பெங்களூர்

இந்தியாவில் கர்நாடக மாநிலத்திலுள்ள 12 நீர்த்தேக்கங்களுக்கு விடுதலைப் புலிகளின் தாக்குதல் அச்சுறுத்தல் இருப்பதாகக் கூறி கர்நாடக அரசு பாதுகாப்பைப் பலப்படுத்தியுள்ளது.

கர்நாடக நிர்வாகத்துறை அமைச்சர் மல்லிகார்ஜுனா கார்கே தலைமையில் நடைபெற்ற உயர்மட்டக் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இந்த உயர்மட்டக் கூட்டத்தில் நீர்ப்பாசன மற்றும் உள்துறை பிரதம செயலாளர்கள், பொலிஸ் இயக்குநர் பி.எஸ்.சியால், (12 ஆம் பக்கம் பார்க்க)

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் கைதாகி சிறைவாசம் அனுபவித்துவரும் முருகன், பேரறிவாளன், சின்ன சாந்தன் ஆகியோருக்கு விதிக்கப்பட்டுள்ள மரணதண்டனையை மறுபரிசீலனை செய்யும்படி இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம் இந்திய அரசிடம் கேட்டுள்ளார்.

இந்த வழக்கில் முருகன், பேரறிவாளன், சின்ன சாந்தன் ஆகியோர் கடந்த 14 வருடங்களாக சிறைவாசம் அனுபவித்து வருகின்றனர். மூன்று பேரும் இந்திய ஜனாதிபதிக்கு கருணை மனுக்களை அனுப்பியுள்ளனர்.


இவர்களுடன் இந்தியா முழுவதும் மொத்தம் மரண தண்டனை விதிக்கப்பட்ட 50 பேரும் இந்திய ஜனாதிபதிக்கு கருணை மனுக்களை அனுப்பியுள்ளனர்.

1993 ஆம் ஆண்டு 21 பொலிஸார் இறந்த வழக்கில் சத்தியமங்கலம் வீரப்பன் குழுவைச் சேர்ந்தவர்கள் எனக் கூறப்படும் ஞானப்பிரகாசம், மாதையா, (12 ஆம் பக்கம் பார்க்க)



# புலிகளின் வாக்குகளை பயன்படுத்தி ரணில் வெற்றிபெற நினைக்கிறார்!

## ஜே.வி.பி. தலைவர் சோமவன்ச குற்றச்சாட்டு



கொழும்பு

ஜனாதிபதித் தேர்தலில் விடுதலைப் புலிகளின் வாக்குகளைக் கொண்டே ரணில் விக்கிரமசிங்க வெற்றிபெறத் தயாராகிறார் என்று ஜே.வி.பி தலைவர் சோமவன்ச அமரசிங்க குற்றம் சாட்டியுள்ளார்.

ஆனமடுவவில் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் சோமவன்ச அமரசிங்க பேசியபோது -

கடந்த தேர்தல்களில் வடக்கு - கிழக்கு வாக்காளர்களில் 98 வீதமானோர் வாக்களிக்காமையால் ரணில் விக்கிரமசிங்கவின் இந்த எதிர்பார்ப்பும் பொய்யாகிப்போகும்.

தமிழீழ விடுதலைப் புலிகள், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் வாக்குகளை வைத்துக்கொண்டே(12 ஆம் பக்கம் பார்க்க)

# புத்தளம் - மன்னார் வீதியில் கொன்ஸ்டபிள் சுட்டுக் கொலை!

கொழும்பு

புத்தளம் - மன்னார் வீதியிலுள்ள மாரியம்மன் கோவிலடிச் சந்தியில் நேற்றிரவு எட்டு மணியளவில் இனந்தெரியாதோர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பொலிஸார் ஒருவர் காயமடைந்து வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்படும்போது வழியில் உயிரிழந்தார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாதவர்களே சோதனைக் கடமையில் ஈடுபட்ட பொலிஸ் குழுவை நோக்கி இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸார் பதில் தாக்குதல் நடத்தியபோது மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாதோர் தப்பியோடிவிட்டதாகவும் இதனையடுத்து பொலிஸார் அந்தப் பகுதியில் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டதாக கூறப்படுகிறது. உயிரிழந்தவர் புத்தளம் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த 26 வயதான விஜயசிறி என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

# கல்விச் செயற்பாடுகள் நாளை முதல் வழமைக்கு!

யாழ்ப்பாணம்

யாழ். குடாநாட்டில் கல்வியியலாளர்கள் படுகொலைகளைக் கண்டித்து கடந்த ஒரு வார காலமாகப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ள மாணவ சமூகம் நாளை புதன்கிழமையிலிருந்து தமது கல்விசார் செயற்பாடுகளை மீள ஆரம்பிக்கவுள்ளது.

இதேவேளை - தமது அழைப்பை ஏற்று யாழ். குடாநாட்டில் இயங்குகின்ற பாடசாலைகள் உட்பட இதர கல்விசார் நிறுவனங்களும் தமது கல்விச் செயற்பாடுகளைப் பகிஷ்கரித்து கண்டனத்தை(12 ஆம் பக்கம் பார்க்க)

# அபிவிருத்தி அமைச்சராகிறார் சொல்ஹெய்ம்!


ஒஸ்லோ

நோர்வேயில் நேற்று புதிதாக அமைக்கப்பட்ட அரசாங்கத்தில் இலங்கைக்கான விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்முக்கு முக்கியத்துவம் வாய்ந்த அபிவிருத்தி அமைச்சர் பதவி வழங்கப்பட்டது.


புதிய அமைச்சரவை விபரங்களை பிரதமர் ஜென்ஸ் ஸ்ரொலன் பேர்க் நேற்றுக்காலை 10 மணியளவில் மன்னர் ஹெரால்ட்டிடம் கையளித்தார். பின்னர் 10.15 மணியளவில் இந்தப் பட்டியல் வெளியிடப்பட்டது. (12 ஆம் பக்கம் பார்க்க)



ஜென்ஸ் ஸ்ரொலன் பேர்க்



ஜொனாஸ் கர்ஸ்ரோர்



எரிக் சொல்ஹெய்ம்

# உடற்கல்வி டிப்ளோமா பட்டத்துக்கு பொதுச்சேவை ஆணைக்குழு அங்கீகாரம்!

## செயலாளர் பாலசிங்கம் உறுதியளிப்பு

யாழ்ப்பாணம் —

யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி டிப்ளோமா பட்டத்துக்கு வடக்கு-கிழக்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழு விரைவில் அங்கீகாரம் வழங்கும் என உறுதியளித்துள்ளது.

இது குறித்து தெரியவருவதாவது-

உடற்கல்வி டிப்ளோமாதாரிகள் சங்கம் பொது நிர்வாக சேவை நியமனத்திற்கு அங்கீகாரம் அளிக்க வேண்டும் என ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் மகாசிவத்தின் ஏற்பாட்டில் - மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுச் செயலாளர் பாலசிங்கத்தை உடற்கல்வி டிப்ளோமா தாரிகள் சங்கத்தினர் கடந்த 8 ஆம் திகதி அவரது அலுவலகத்தில் சந்தித்தனர்.

இந்தச் சந்திப்பில் தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் த. மகாசிவம், உடற்கல்வி டிப்ளோமா தாரிகள் சங்கத் தலைவர் ப.தர்ம குமாரன், நிர்வாகசபை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பில் உடற்கல்வி டிப்ளோமா பாடநெறி, பொது நிர்வாக சேவைக்கு ஏற்றதுபோல் அமைந்துள்ளது. சமூகவியல், உளவியல், முகாமைத்துவம் ஆகிய பாடங்கள் இந்தப் பாட விதானத்திலும் உள்ளடக்கப்பட்டுள்ளன என்பது சுட்டிக்காட்டப்பட்டது.

உடற்கல்வி டிப்ளோமா பாடவிதானத்தைப் பரிசீலித்த பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளர் பாலசிங்கம், உடற்கல்வித் துறைக்கு விரைவில் அங்கீகாரம் தருவதாக உறுதியளித்தார்.

அத்துடன், தகுதியான மாணவர்களை உடற்கல்வி ஆசிரிய வெற்றிடத்துக்கு நிரப்பவேண்டும் என்றும், இதற்கு தான் பூரண ஆதரவை ஆசிரியர் சங்க பொதுச் செயலாளருக்கு வழங்குவதாகவும், இந்த ஆண்டின் இறுதிக்குள் உடற்கல்வி ஆசிரிய நியமனம் வழங்குவதற்கு ஏற்பாடு செய்வதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் த.மகாசிவம், தமது தொழிற்சங்கப் போராட்டத்தில் உடற்கல்வி டிப்ளோமாதாரிகளுக்கும் வேலை வாய்ப்பு வழங்கப்படவேண்டும் எனக் கோரி இருப்பதுடன் கல்வியமைச்சின் செயலாளர் கலாநிதி தாரா டி மெல்லிடமும் அறிவுறுத்தியுள்ளார்.

# கல்லூரி அதிபர்கள் கொலைக்கு அதிபர்கள் சங்கம் கண்டனம்!

யாழ்ப்பாணம் —

போரினால் ஏற்பட்ட பாதிப்புகளால் நலிவடைந்துள்ள யாழ். மாவட்டத்தின் கல்வித்தரத்தினை மேம்படுத்துவதற்காகப் பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் அர்ப்பணிப்புடன் சிறப்பாகச் செயலாற்றிவந்த சிரேஷ்ட கல்லூரி முதல்வர்களான ந.சிவகடாட்சம், ச.இராசதுரை ஆகியோர் கண்மூடித்தனமாகக் கொலை செய்யப்பட்ட சம்பவங்களை வடமாகாண அதிபர்கள் சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது.

இவ்வாறான சம்பவங்கள் கல்வி நடவடிக்கைகளைப் பாரதூரமாகப் பாதிக்கச் செய்யவல்லனவாகும். யாழ். மாவட்டத்தில் வலுக்குன்றி வரும் பாடசாலைக் கல்வி முகாமைத்துவ நடவடிக்கைகளை மேலும் வலுவிழக்கச் செய்யவல்லதும், கல்விச் செயற்பாடுகளின் அடிக்கட்டுமானத்தையே ஆட்டங்காணச் செய்ய வல்லதுமான இவ்வாறான கொலைகள் இனி வரும் காலங்களில் இடம்பெறாது பார்த்துக்கொள்ளவேண்டியது அனைவரினதும் தலையாய பொறுப்பாகும் என வடமாகாண அதிபர் சங்கம் கேட்டுள்ளது.

# பாதீனியம் களைகளை அழிக்குமாறு கோரிக்கை!

யாழ்ப்பாணம் —

மிகமோசமான தாக்கங்களை ஏற்படுத்தும் களையான பாதீனியம் செடிகளைக் கண்டால் அழித்துவிட வேண்டுமென, விவசாயத் திணைக்களத்தின் பயிர்பாதுகாப்புச் சேவை, யாழ்.குடாநாட்டில் கமநலசேவைகள் பிரதேச அலுவலகங்கள் மூலமாக பொதுமக்களுக்கு அறிவுறுத்திவருகிறது.

பொதுமக்களின் விவசாய நிலங்களிலோ, பயிர்களிடையோ பாதீனியம் களை காணப்படுமாயின், அது தாவரப்பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும். எனவே, பாதீனியம் செடிகளை இனங்கண்டால் உடனடியாக பிரதேசத்தின் விவசாய போதனாசிரியருக்கு அறிவிக்குமாறும் அல்லது கிளைபோசெட் அல்லது 2-4D களை நாசினியை விசிறி பாதுகாப்பான முறையில் பிடுங்கி எரித்துவிடுமாறும் பயிர்பாதுகாப்பு சேவை கோரியுள்ளது. (14)

# கிராம அபிவிருத்திச் சங்க கட்டட அடிக்கல் நாட்டுவிழா!

பண்டத்தரிப்பு —

பண்டத்தரிப்பு கிரா அபிவிருத்தி சங்கத்திற்கு நிரந்தர கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு இன்று காலை 10.30 மணிக்கு சங்கத் தலைவர் ச.செல்வரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா அடிக்கல் நாட்டவுள்ளார். இந்தக் கட்டடத்திற்கான காணியை முன்னாள் கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் அமரர் அ.வ.துரையப்பா நன்கொடையாக வழங்கியிருந்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவினால் இக் கட்டடத்திற்கு ஒரு இலட்சம் ரூபா நிதி பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி

அண்மையில் வெளியிடப்பட்ட தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் வைத்திலிங்க வித்தியாசாலையில் சித்திபெற்ற மாணவர்கள் விபரம் வருமாறு :-

ம.சஞ்சீவன் 142
அ.ஜிந்துஷன் 133
ம.ராகினி 128

# விவசாய கற்கை நெறிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது!

யாழ்ப்பாணம் —

மருதனார் மடத்திலுள்ள யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம் விவசாய கற்கை நெறிகளை மேற்கொள்வதற்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

நான்குமாத காலம் இலவசமாக வழங்கப்படவுள்ள விவசாய பயிற்சி நெறிக்கு 17 - 26 வயதிற்குட்பட்ட க.பொ.த (சா/த) பரீட்சையில் சித்தியடைந்த ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க முடியுமென விவசாய நிறுவனத்தினர் தெரிவித்தனர்.

விவசாய மூலதத்துவம், பயிரியல், பூங்கனியியல், மிருக பரிபாலனம் ஆகிய பாடங்களுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாகவும், பயிற்சியைப் பூர்த்தி செய்பவர்களுக்கு இப் பயிற்சியை உள்ளடக்கிய விவசாய சான்றிதழ் வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

பயிற்சிக்கான நேர்முகத் தேர்வு நாளை காலை 9 மணிக்கு மேற்படி விவசாய நிறுவனத்தில் இடம்பெறவுள்ளது.

கல்வித் தர சான்றிதழுடன் கிராம அலுவலர், ஏனைய இருவரது நற்சான்றிதழ்களும் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

பயிற்சிக் காலத்தில் சிறு உதவுதொகையுடன் பெண்களுக்கான விடுதி வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது (91)

# வலி - தெற்கு பிரதேசசபை நடத்திய உள்ளூராட்சிவார போட்டி முடிவுகள்

உடுவில் —

வலி. தெற்குப் பிரதேச சபையினரால் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட சித்திரப் போட்டி, பேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு -

### சித்திரப்போட்டி

#### ஆரம்பப் பிரிவு

பி.சேவியர் அன்ரன் (சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயம்), லைனஸ் சூசைதாசன் (சுன்னாகம் றோ.க.த.க. பாடசாலை), இ.புவிராஜ் (தாவடி இ.த.க.பாடசாலை)

#### கீழ்ப்பிரிவு

வே.கிறிஸ்ரினா (ஏழாலை சைவ மகாஜனா வித்தியாலயம்), ச.சக்தி பாலசர்மா (கந்தரோடை ஸ்கந்தவரோதயா கல்லூரி), த.மதுஷியா (மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி)

#### மத்திய பிரிவு

யோ.சிவேந்திரன் (இணுவில் மத்திய கல்லூரி), ச.அர்ச்சனா (இணுவில் மத்திய கல்லூரி), அ.ராஜித்தன் (உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம்)

#### மேற்பிரிவு

.சிறிவாகீசன் (இணுவில் மத்திய கல்லூரி), தே.அகிலன் (இணுவில் மத்திய கல்லூரி), சி.சிவாகரன் (இணுவில் மத்திய கல்லூரி)

### பேச்சுப்போட்டி

#### ஆரம்பப் பிரிவு

செ.தக்சாயினி (ஏழாலை தெற்கு அ.மி.த.க. பாடசாலை), த.ஜன்சிகா (ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை), வி.பிரணவி (சங்குவேலி அ.த.க.பாடசாலை)

#### கீழ்ப்பிரிவு

க.வசீகரன் (இணுவில் மத்திய கல்லூரி), த.சிவதீபா (மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி), ப.கோவேழன் (கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி)

#### மத்திய பிரிவு

சி.சிந்து (இணுவில் மத்திய கல்லூரி), வ.கலைவாணன் (கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி), இ.சாளினி (தாவடி இ.த.க. பாடசாலை).

#### மேற்பிரிவு

தி.கபில்ராஜ் (கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி), ச.வாகீசன் (இணுவில் மத்திய கல்லூரி),

### கட்டுரைப் போட்டி

#### ஆரம்பப் பிரிவு

கு.டிலானி (சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயம்), சி.லதாஜினி (மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி), த.தனுஷா (தாவடி இ.த.க. பாடசாலை)

#### கீழ்ப்பிரிவு

ஜெ.துளசிகா (இணுவில் மத்திய கல்லூரி), வே.பிரசில்லா (ஏழாலை சைவ மகாஜனா வித்தியாலயம்), க.நிவேதா (இணுவில் மத்திய கல்லூரி),

#### மத்திய பிரிவு

செ.தேனுசா (உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம்), க.கல்யாணி (இணுவில் மத்திய கல்லூரி), த.வைஸ்ணா (கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி),

#### மேற்பிரிவு

க.சத்தியா (மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி), ம.ஜெயராணி (இணுவில் மத்திய கல்லூரி), ச.ஜலஜா (கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி)

(101)

## கிறிஸ்தவ ஒன்றியத்தில் பத்திரிகையாளர்களுக்கு பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம் —

யாழ். கிறிஸ்தவ ஒன்றியம் பத்திரிகையாளர் பயிற்சிப் பட்டறை ஒன்றை இம்மாத இறுதிப் பகுதியில் நடத்தவுள்ளது. இந்தப் பயிற்சிப் பட்டறையில் கலந்துகொள்ள விரும்புவோர் தமது விண்ணப்பங்களை விரைவாக அனுப்புமாறு ஒன்றியத்தின் இலக்கியப் பகுதி இணைப்பாளர் கேட்டுள்ளார்.

இருநாள் கருத்தமர்வுடனான பயிற்சிப் பட்டறையில் பங்குகொள்வோருக்கு சான்றிதழ் வழங்கப்படுமெனவும், இந்தப் பயிற்சிகள் இம்மாதம் 29 ஆம் 30 ஆம் திகதிகளில் இடம்பெறுமெனவும் இணைப்பாளர் மேலும் தெரிவித்தார். (91)

## பிரதேச சபை ஊழியர்கள் இரத்ததானத்துக்கு அழைப்பு

வலிகாமம் தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையினர் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு இரத்த தானம் வழங்கவுள்ளாதாக பிரதேச வட்டாரங்கள் தெரிவித்தன.

எதிர்வரும் 20 ஆம் திகதி வியாழக்கிழமை காலை யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கிப் பிரிவில் இரத்ததான நிகழ்வு இடம்பெறும்.

வலிகாமம் பகுதி குருதிக் கொடையாளர்கள் பிரதேச சபையுடன் இணைந்து இரத்ததானம் செய்ய விரும்பினால் எதிர்வரும் புதன் கிழமைக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறும் பிரதேச சபை அலுவலர்களில் 23 பேர் இரத்ததானம் செய்யவுள்ளாதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (91)

## தேசிய வாசிப்பு மாதம் சாவகச்சேரியில் அனுஷ்டிப்பு!

சாவகச்சேரி —

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சாவகச்சேரி நகரசபையின் பொதுநூலகங்களினால் நூலக வாசிப்பு மாதம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

இந்தத் தேசிய வாசிப்பு மாதம் இந்த மாதம் முடிவு வரை அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதற்கமைவாக நூலக கொடி வாரம் ஒன்றினை ஏற்படுத்தி வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கக்கூடிய வகையில் பதாகைகள் - நகரசபை மற்றும் நூலகங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், மேற்படி தினத்தை முன்னிட்டு பாடசாலைகளுக்கிடையே கட்டுரைப் போட்டியும் நடத்தப்படவுள்ளது. (29)


சுன்னாகம் நாகம்ஸ்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு மூன்றாவது ஜனத்திரள் வாரமாக
ஜெயம் ரவி, ஸ்ரேயா, வடிவேல், கலாபவன்மணி, நடித்த
மழை

காட்சிகள்:-11.00,3.00,7.00, (பழையநேரம்)

ராஜா யாழ்ப்பாணம்
மூன்றாவது வெற்றி வாரமாக
சூர்யா, அஸின், நயன்தாரா, பிரகாஸ்ராஜ் நடித்த
கஜினி

ரிக்கற் முற்பதிவு செய்து கொள்ளலாம்
காட்சிகள்:-10.30,2.30, 6.30, மட்டும் (ப.நேரம்)

நாதன்ஸ் யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)
அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க
சரத்குமார், வைகைப்புயல் வடிவேலு, நமீதா நடித்த
சாணக்யா

காட்சிகள்:-10.30, 2.30,6.30, 9.30 (புதிய நேரம்)

நிரஞ்சனாஸ் சங்கானை
ஸ்ரீகாந் சோனியா அகர்வால் நடித்த
ஒருநாள் ஒரு கனவு
காட்சிகள் 11.00, 2.45, 5.00 (புதிய நேரம்)

மனோகரா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு!
பார்த்தீபன், லட்சுமிராய், வடிவேல் மற்றும் பலர் நடித்த
குண்டக்க மண்டக்க...
காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 5.30, 9.30

புத்தம் புதிய DAIDO BRAND NEW
100 CC.4.GERA

0112 341580, 0112 341581

"வாசியுங்கள் அகவிழி திறக்கும்"
வாசிப்போம் வாசித்ததை யோசிப்போம்
அகவிழி
AHAVILI,3, Torrington Avenue, Colombo - 7, Sri Lanka.
(C/4683)
T.P. 011- 2506272, E-Mail:ahavili@viluthu.org

# முஸ்லிம் மக்களுக்கு சுயாட்சி வழங்குவதாக ரணில் உறுதி!



கொழும்பு—

இனப்பிரச்சினைக்கான தீர்வு நடைமுறைப்படுத்தப்படும் போது கிழக்கில் முஸ்லிம்களுக்கு சுயாட்சி வழங்கப்படும் என்று ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளரான ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்தார்.

கிழக்கு மாகாணத்தில் கடந்த சனிக்கிழமையும் நேற்று முன்தினமும் அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்டார்.

கிழக்கு மாகாணத்தில் தங்கியிருக்கும் அவர் - அம்பாறை மாவட்டத்தில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையில் சம்மாந்துறை மற்றும் அட்டாளைச்சேனை ஆகிய இடங்களில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் உரையாற்றினார்.

இந்தக் கூட்டங்களில் ரணில் பேசுகையில் -

சுனாமி பொதுக்கட்டமைப்பைப் பொறுத்தவரையில் அந்த விவகாரம் தற்போது நீதிமன்றத்தில் இருப்பதால் அதுபற்றி எவ்வித கருத்துக்களையும் என்னால் தெரிவிக்கமுடியாது. ஆனால், நான் ஜனாதிபதியான பின்பு உத்தேசித்துள்ள இது தொடர்பான கட்டமைப்பில் முஸ்லிம்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் வழங்கப்படும்.

இழப்புக்களைப் பொறுத்தவரையில் எவ்வித பேதங்களுமின்றி அனைவருக்கும் ஏற்பட்டுள்ளதே உண்மை. இந்த நிலையில் அதில் முஸ்லிம்களுக்கான பிரதிநிதித்துவம் பற்றி ஆழமாக சிந்தித்து முடிவெடுத்துள்ளேன்.

எந்தவொரு பிரச்சினைக்குத் தீர்வு காண்பதென்றாலும் முஸ்லிம் தலைமைத்துவத்துக்கு மதிப்பளித்து அந்த தலைமையுடன் ஆலோசித்தே முடிவெடுத்துள்ளேன். எதிர்காலத்திலும் அப்படித்தான் செயற்படுவேன்.

இந்த நாட்டில் இனப்பிரச்சினைக்கான தீர்வு, கூட்டாட்சி அடிப்படையிலேயே அமைய வேண்டும் என்பதை ஒஸ்லோ பிரகடனம் வலியுறுத்துகின்றது. இது தொடர்பாக என்னால் தனித்து எந்தவித அங்கீகாரத்தையும் அளிக்கமுடியாது. தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களின் இணக்கப்பாடு தேவை.

இதன் காரணமாகவே உத்தேச சமாதானப் பேச்சுவார்த்தைகளின்போது முஸ்லிம்களுக்கு தனித்தரப்பு இருக்கவேண்டும் என்பதை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். இந்த அடிப்படையில்தான் நாம் செயற்படுவோம். தீர்வுத்திட்டம் ஒன்று அமுலுக்கு வரும்போது முஸ்லிம் பிரதிநிதிகளும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் அவர்களுக்கு தனியாக சுயாட்சி ஏற்படுத்தப்படும்.

நிலத்தொடர்பற்ற வகையில் இந்த அதிகார அலகு கிழக்கு மாகாண முஸ்லிம்களுக்கு வழங்க முடிவெடுத்துள்ளோம்.

இவையனைத்தையும் உள்ளடக்கியதாகவே உத்தேச சமாதானப் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

முஸ்லிம்களின் பாதுகாப்பு மற்றும் அம்பாறை மாவட்ட முஸ்லிம் பிரதேசங்கள் அபிவிருத்தி உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும் தனது உரையில் ரணில் விளக்கினார்.

அம்பாறை நகரில் கடந்த சனிக்கிழமை இரவு சிங்கள மக்கள் மத்தியில் உரையாற்றினார்.

## சண்டே லீடர் அலுவலகம் மீது தாக்குதல்

கொழும்பு—

இலங்கையின் ஆங்கில ஏடான சண்டே லீடர் அலுவலகத்தின் மீது நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு ஆயுதக்குழுவொன்று தாக்குதல் நடத்தியுள்ளது.

சண்டே லீடரின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க இந்தச் சம்பவம் குறித்து கூறுகையில் -

இரத்மலானையில் உள்ள சண்டே லீடர் அச்சகத்துக்குள் 7 பேர் கொண்ட குழுவினர் அத்துமீறி உள்நுழைந்தனர்.

அங்கிருந்த செய்தித்தாள் கட்டுகளுக்கு தீ வைத்த அந்தக் குழு கடமையிலிருந்த ஊழியர்களையும் அச்சுறுத்திவிட்டுச் சென்றதாகவும் கூறினார்.

# பிரதமரின் தேர்தல் வாக்குறுதிகள் அடுத்த வரவு - செலவுத் திட்டத்தில்


கொழும்பு—

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் அடங்கியுள்ள வாக்குறுதிகள் அடுத்த வரவு - செலவுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு உடனடியாக நடைமுறைப்படுத்துவதற்கு அவர் தீர்மானித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி அனைத்துவகை உரங்கள் 350 ரூபாவுக்கு விவசாயிகளுக்கு வழங்குதல், 5 வயதுக்குக் குறைந்த பிள்ளைகளுக்கு பால்மா கொடுப்பதற்கு மாதாந்தம் 200 ரூபா வழங்குதல் ஆகிய ஆலோசனைகள் வரவு - செலவுத்திட்டத்தில் சேர்க்கப்பட்டு அடுத்த ஜனவரி முதல் செயற்படுத்தப்படும்.

அத்துடன் கர்ப்பிணித் தாய்மாருக்கு மாதாந்தம் போசாக்கு நிறைந்த உணவுப் பொதி வழங்கல், பிள்ளை பிறந்தபின் தந்தையருக்கு இருவாரகால விடுமுறை வழங்கல், மின்கட்டணம், நீர் கட்டணம் என்பவற்றில் உறுதிப்படுத்தப்பட்ட ஆரம்பகட்டணத்தில் பாவனையாளர்களுக்கு உதவி வழங்கல் என்பனவும் வரவு - செலவுத் திட்டத்தில் சேர்க்கப்படும்.

பிரதமரின் தேர்தல் விஞ்ஞாபனத்துக்கு 'மஹிந்த சிந்தனை' எனப் பெயரிடப்பட்டுள்ளது. பல்கலைக்கழக மாணவர்களின் மகாபொல கொடுப்பனவை 500 ரூபாவால் அதிகரிப்பது, தேர்தல் விஞ்ஞாபனத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.



ஊடகவியலாளர்களுக்கு தேர்தல் விஞ்ஞாபனம் வழங்கும் நிகழ்வு நாளை கொழும்பு பண்டாரநாயக்கா மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (தே)

# பண்டா-செல்வா ஒப்பந்தம் அமுலாகியிருந்தால் நாட்டில் இனப்பிரச்சினை வெடித்திருக்காது!

## அனுரா தெரிவிப்பு



கொழும்பு—

இலங்கையில் 1958 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட பண்டா - செல்வா ஒப்பந்தம் நடைமுறைப்பட்டிருந்தாலும் இனப்பிரச்சினை வெடித்திருக்காது என்று வெளிவிவகார அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க தெரிவித்தார்.

மிரிகமவில் மஹிந்த ராஜபக்ஷவை ஆதரித்து சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஏற்பாடு செய்திருந்த பரப்புரைக்கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

1953 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட அரசசபையில் அதிகாரப் பகிர்வு குறித்து என் தந்தை பண்டாரநாயக்க சுட்டிக்காட்டினார். அதை 1958 ஆம் ஆண்டு பண்டா - செல்வா ஒப்பந்தமாக உருவாக்கினார். ஐக்கிய தேசியக் கட்சி உள்ளிட்ட பல கட்சிகள் பண்டா - செல்வா ஒப்பந்தத்தை அன்று மிகக்கடுமையாக எதிர்த்தன.

பண்டா - செல்வா ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டிருந்தால் இனப்பிரச்சினை இவ்வளவு பெரிதாக வெடித்திருக்காது.

விலைவாசி உயர்வுகளை எவ்வாறு கட்டுப்படுத்தப் போகிறார் என்பதை ரணில் தெரியப்படுத்தவேண்டும் என்று சவால் விடுகிறோம்.

மஹிந்த ராஜபக்ஷவை பல்வேறு கட்சிகள் இப்போது ஆதரிக்கின்றன. அந்தக் கட்சிகளின் கொள்கைகளுடன் எனக்கு உடன்பாடு இல்லை. வாரியபொலவில் நடைபெற்ற கூட்டத்தில் சுதந்திரக்கட்சியின் கொள்கைகளை ஜனாதிபதி சந்திரிகா தெளிவுபடுத்தியிருக்கிறார்.

1978 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட அரசியல் யாப்புத் திருத்தத்தின்படி இந்த நாட்டின் அரச தலைவர் நீண்டகாலம் மக்களுக்குச் சேவையாற்ற முடியாமல் செய்துவிட்டது. நாட்டின் பிரதமராக எனது தாயார் 17 ஆண்டுகள் சேவையாற்றியுள்ளார்.

எனது சகோதரியும் இரு முறை ஜனாதிபதியாகக் கடமையாற்றியுள்ளார். தேர்தலில் நாங்கள் வெற்றியும் பெற்றிருக்கிறோம். தோல்வியும் அடைந்திருக்கிறோம். நாங்கள் சுதந்திரக்கட்சிக்கு உரிமை கோருவதாக சிலர் கூறுகிறார்கள். சுதந்திரக்கட்சி எங்களது குடும்பச் சொத்து அல்ல. மக்கள் சேவையாற்ற எங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டதால் நாங்கள் அந்தப் பணியை ஏற்கிறோம். அவர்கள் விரும்பவில்லையென்றால் நாங்கள் வீட்டுக்குப் போகிறோம் என அவர் மேலும் கூறினார்.

# பாடசாலை மாணவரிடையே மதுப் பாவனை அதிகரிப்பு!

கொழும்பு—

இலங்கையில் பாடசாலை மாணவர்களிடையே மதுபாவனை அதிகரித்துள்ளதாக யுனிசெப் அமைப்பு தெரிவித்துள்ளது. யுனிசெப் இலங்கையில் மாணவர்கள் தொடர்பாக மேற்கொண்ட ஆய்வுகளின் அடிப்படையில் பாடசாலை செல்லும் மாணவர்களில் 22 வீதமானோர் மதுபாவனைக்கு அடிமையாகியுள்ளமை தெரியவந்துள்ளது.

14 தொடக்கம் 19 வயதுக்கு இடைப்பட்ட சுமார் 40 ஆயிரம் மாணவர்கள் இந்த ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டனர். இந்த ஆய்வின் மூலம் பாடசாலை மாணவிகளும் புகைத்தலுக்கு அடிமையாகியுள்ளமை தெரியவந்துள்ளது.

முதலில் பியர் போன்ற மதுவகைகளை அருந்தப் பழகும் மாணவர்கள், பின்னர் மதுபானங்களை அருந்துவதாக யுனிசெப் அமைப்பின் ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

# குண்டுகளை வைத்திருந்த முஸ்லிம் பெண் கைது!

மட்டக்களப்பு—

மட்டக்களப்பு - வாழைச்சேனை பிரதேசத்தில் வீடு ஒன்றில் 2 கைக்குண்டுகளை மறைத்து வைத்திருந்தார் என்ற சந்தேகத்தின் பேரில் முஸ்லிம் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தங்களுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் பொலிஸார் இவரது வீட்டுக்குச் சென்றதாகவும், அங்கு 2 கைக்குண்டுகளையும் இந்தப் பெண் நிலத்தில் குழிவெட்டிப் புதைத்து மறைக்க முற்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

ஏற்கனவே கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள தனது மகனால் இவை தன்னிடம் தரப்பட்டதாக விசாரணையில் கைது செய்யப்பட்டிருக்கும் பெண் கூறியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மொகமட் காசிம் உம்மு நாச்சி (வயது 42) என்ற இந்தப் பெண் மட்டக்களப்பு மேலதிக நீதிபதி எம்.எச்.எம்.அஜ்மீர் முன்னிலையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஆஜர்படுத்தப்பட்டபோது எதிர்வரும் 1 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைப்பதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

# நேரடி விவாத அழைப்பை மஹிந்த ஏற்கவேண்டும்!

## டி.எம்.ஜெயரட்ண கூறுகிறார்

கொழும்பு—

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க விடுத்துள்ள நேரடி விவாதத்திற்கான அழைப்பினை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷ ஏற்றுக்கொள்ளவேண்டும் என அமைச்சர் டி.எம்.ஜெயரட்ண தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் தம்முடன் ஹெல்ப்பிங் அம்பாந்தோட்ட விவகாரம் தொடர்பாக நேரடி விவாதத்தில் கலந்துகொள்ளுமாறு ரணில் விக்கிரமசிங்க, மஹிந்த ராஜபக்ஷவுக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

இந்தநிலையில் இதனை ஏற்றுக்கொண்டு மஹிந்த ராஜபக்ஷ ரணில் விக்கிரமசிங்கவுடன் விவாதத்துக்கு சென்று தம்மீதான குற்றச்சாட்டுகளை பொய்யென நிரூபிக்க முயலவேண்டும் என்றும் அவர் மேலும் கேட்டுள்ளார்.

# பாதுகாப்பு ஆலோசகருக்கு ஒரு லட்சம் ரூபா சம்பளம்


கொழும்பு—

இலங்கை பிரதமரும் சுதந்திரக்கட்சியின் வேட்பாளருமான மஹிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பு ஆலோசகரான ஓய்வுபெற்ற லெப்.கேணல் கொட்டபய ராஜபக்ஷவுக்கு ஒரு லட்சம் ரூபா ஊதியம் வழங்க அமைச்சரவை ஒப்புதல் தெரிவித்துள்ளது.

இலங்கை இராணுவத்தில் பணியாற்றிய கொட்டபய ராஜபக்ஷ, நீண்டகாலமாக அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ், கலிபோர்னியாவில் வசித்து வந்தார்.

ஜனாதிபதி வேட்பாளராக மஹிந்த ராஜபக்ஷ நியமிக்கப்பட்டதும், அவர் இலங்கைக்குத் திரும்பினார்.


இதையடுத்து அவரை கூடுதல் அமைச்சரவைச் செயலாளர் தகுதியிலான பாதுகாப்பு ஆலோசகராக நியமிக்க மஹிந்த முடிவு செய்தார். இதற்கான ஒப்புதலையும் அமைச்சரவை அளித்துள்ளது.



# மீண்டும் அவுஸ்ரேலிய அணியிடம் மண் கவ்வியது உலக லெவன்!







சிட்னி —

உலக லெவன் அணியை 210 ஓட்டங்களால் தோற்கடித்து சுப்பர் சீரிஸ் டெஸ்ட் போட்டியில் அவுஸ்ரேலிய அணி அபார வெற்றியைப் பெற்றது.

முதல் இனிங்ஸில் அவுஸ்ரேலியா 345 ஓட்டங்களைக் குவித்தது. இதையடுத்து ஆடிய உலக லெவன் முதல் இனிங்ஸில் 190 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. அவுஸ்ரேலியா தனது 2ஆவது இனிங்ஸில் 199 ஓட்டங்களைப் பெற்றது.

இதனைத் தொடர்ந்து 354 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு ஆடத் தொடங்கிய உலக லெவன் - 3ஆவது நாள் ஆட்டநேரமுடிவில 2 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 25 ஓட்டங்களை எடுத்திருந்தது. ராவிட் 17 ஓட்டங்களுடனும், லாறா ஓட்டமெதையும் எடுக்காமலும் களத்தில் இருந்தனர்.

விளையாட்டு

நேற்று 4ஆவது நாள் ஆட்டம் இடம்பெற்றது. இருவரும் தொடர்ந்து ஆடினர். ஆட்டம் தொடங்கிய சிறிது நேரத்திலேயே அவுஸ்ரேலியாவின் அனல் பறக்கும் பந்துவீச்சில் விக்கெட்டுக்கள் மளமளவென சரியத் தொடங்கியது.

ஸ்கோர் 56ஆக இருந்தபோது - ராவிட்டின் விக்கெட்டை வோன் கைப்பற்றினார். ஹைடனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்த ராவிட், 67 பந்துகளில் 3 பவுண்டரிகளுடன் 23 ஓட்டங்களை எடுத்தார்.

அடுத்து லாறாவுடன் கலிஸ் இணைந்து நிதானமாக ஆட்டத்தைத் தொடர்ந்தார். ஸ்கோர் 69ஐ எட்டியபோது, லாறாவும் பரிதாபகரமாக பவிலியன் திரும்ப நேரிட்டது.

வோனின் பந்துவீச்சில் கில்கிறிஸ்டிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்த லாறா 51 பந்துகளில் 36 ஓட்டங்களை எடுத்தார்.

இதையடுத்து அணியை சரிவிலிருந்து மீட்பார் என எதிர்பார்க்கப்பட்ட இன்சமாம் - வந்த வேகத்திலேயே பிரெட் லீயின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் டக் அவுட்டாகி வெளியேறினார்.

மதிய உணவு இடைவேளையின்போது உலக லெவன் அணி 5 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 113 ஓட்டங்கள் என்ற நிலையில் இருந்தது.

மதிய உணவுக்குப் பின்னர் ஆட்டம் தொடங்கியபோது - ஸ்கோர் 122ஆக இருந்தபோது, பிளின்ரொப் வீழ்த்தப்பட்டார். மக்கிலின் பந்துவீச்சில் 27 பந்துகளில் 2 பவுண்டரிகளுடன் 15 ஓட்டங்களை அவர் எடுத்திருந்தார்.

பிளின்ரொப்பின் விக்கெட்டை வீழ்த்திய பின்னர், மக்கில் பந்துவீச்சில் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கினார். இதற்கிடையே கலிஸுடன் இணைந்த பௌச்சர், வோனின் பந்தை அடித்து ஆடமுற்பட்டபோது, ஹைடனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். இதன்போது ஸ்கோர் 143ஆக இருந்தது.

ஸ்கோர் 144ஆக இருந்தபோது - மக்கில் அடுத்தடுத்து மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார். பொண்டிங்கிடம் பிடிகொடுத்து விற்றோரியும், எல்.பி.டபிள்யூ முறையில் ஹார்மிசனும். கில்கிறிஸ்டால் ஸ்டம் செய்யப்பட்டு முரளிதரனும் ஓட்டமெதையும் எடுக்காமலேயே ஆட்டமிழந்தனர்.


JOHNNIE WALKER. SUPER SERIES AUSTRALIA 2005


உலக லெவன் அணி 144 ஓட்டங்களுக்குள் சுருண்டதால், அவுஸ்ரேலிய அணி 210 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

கலிஸ் 86 பந்துகளைச் சந்தித்து 3 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் 39 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இரண்டாவது இனிங்ஸ் பந்துவீச்சில் மக்கில் ஆதிக்கம் செலுத்தினார். இவர் 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினா... வோன் 3 விக்கெட்டுக்களையும், லீ, மக்ரா ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களையும் பங்கு போட்டுக் கொண்டனர்.

சுப்பர் சீரிஸ் ஒருநாள் போட்டித் தொடரில் 3 போட்டிகளையும் ஒட்டுமொத்தமாக வென்ற அவுஸ்ரேலியா 6 நாள் டெஸ்ட் போட்டியை நான்காவது நாளிலேயே வென்று - உலக லெவன் அணியை மண் கவ்வச் செய்தது.








# எங்களுக்குள் மோதல் இல்லை!

## சச்சின், கங்கூலி கூட்டாக அறிக்கை



மும்பை —

தமக்குள் மோதல் எதுவும் இல்லை என்று டெண்டுல்கரும், கங்கூலியும் கூட்டாக அறிக்கை வெளியிட்டனர்.

இந்திய கிரிக்கெட் அணியின் கப்டனாக இருந்த கங்கூலி அந்தப் பதவியிலிருந்து நீக்கப்பட்டு, அவருக்குப் பதிலாக ராவிட் புதிய கப்டனாக நியமிக்கப்பட்டிருக்கிறார். கங்கூலி கப்டன் பதவியிலிருந்து நீக்கப்பட்டதற்கு டெண்டுல்கர்தான் காரணம் என்று சில இந்திய பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தன.

கங்கூலியின் தலைமையின்கீழ் விளையாட டெண்டுல்கர் விரும்பவில்லை. இதை டெண்டுல்கர் தெரிவுக் குழுவினரிடம் தெரிவித்தார். எனவேதான் கங்கூலியை கப்டன் பதவியிலிருந்து நீக்கிவிட்டார்கள் என்றும் செய்தி பிரசுரிக்கப்பட்டிருந்தது.

இதற்கு உடனடியாகத் தெரிவுக் குழுத் தலைவர் கிரண் மோரேயும். கிரிக்கெட் சபையின் செயலாளர் எஸ்.கே.நாயரும் மறுப்புத் தெரிவித்தனர். இப்படி செய்தி வெளியானதால் - டெண்டுல்கரும், கங்கூலியும் கவலையடைந்துள்ளனர்.

இந்தப் பிரச்சினைக்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைக்க அவர்கள் முடிவு செய்தனர். எனவே, நேற்று முன்தினம் டெண்டுல்கரும், கங்கூலியும் இணைந்து கூட்டாக ஒரு அறிக்கை வெளியிட்டனர். அதில் அவர்கள் கூறியிருப்பதாவது -

எங்கள் இருவருக்கும் இடையே எந்த மோதலும் இல்லை. பத்திரிகையில் செய்தி வெளிவந்திருப்பது போல கங்கூலி தலைமையின் கீழ் டெண்டுல்கர் விளையாட விரும்பவில்லை என்று சொல்லப்படுவது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானதாகும்.



இது போன்ற செய்திகள் கிரிக்கெட் விளையாட்டைத் தவறான பாதைக்கு இழுத்துச் சென்றுவிடும். எனவே, தவறான செய்தி வெளியிட்ட பத்திரிகைகள் வருத்தம் தெரிவிக்கும் என்று எதிர்பார்க்கிறோம். இதேபோல தொடர்ந்து எழுதினால் நாங்கள் சட்டப்படி நடவடிக்கை எடுப்போம். இவ்வாறு அவர்கள் கூறியுள்ளனர்.

இதேவேளை, இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் கங்கூலி முழங்கையில் ஏற்பட்ட காயம் காரணமாக சிகிச்சை பெற்று வருகிறார்.

அவருக்கு சிகிச்சை அளித்துவரும் டொக்ரர் கல்யாண் முகர்ஜி நேற்று நிருபர்களிடம் பேசுகையில் -

கங்கூலி இப்போது குணமடைந்து வருகிறார். இதே நிலை நீடித்தால் நிச்சயமாக ராஜ்கோட்டில் நடைபெறவுள்ள துலிப் கிண்ணப் போட்டியில் அவர் விளையாடமுடியும் என்று தெரிவித்தார்.

இம்மாதம் 20ஆம் திகதி முதல் துலிப் கிண்ணப் போட்டி கிழக்கு மண்டல அணி - வடக்கு மண்டல அணிகளிடையே நடைபெறவுள்ளது. கிழக்கு மண்டல அணிக்கு கங்கூலி கப்டனாக அறிவிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கிரெம்ளின் கிண்ணத்தை வென்றார் மேரி பியர்ஸ்



மொஸ்கோ —

ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் கிரெம்ளின் கிண்ணத்துக்கான ரெனிஸ் தொடர் நடைபெற்றது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதிப் போட்டியில் பிரான்ஸின் மேரி பியர்ஸ், இத்தாலியின் பிரான்சஸ்காசிவியானை 6-4, 6-3 என்ற நேர் செட்களில் வீழ்த்தி சம்பியனானார். வெற்றிக் கிண்ணத்துடன் மேரி பியர்ஸ்.

# 10ஆவது வீரர் ஹைடன்



சிட்னி —

உலக லெவன் அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் முதல் இனிங்ஸில் சதமடித்த மத்தியூ ஹைடன், 2ஆவது இனிங்ஸிலும் அபாரமாக ஆடினார். நேற்றுமுன்தினம் இவர் டெஸ்ட் போட்டியில் தனது 21ஆவது அரைச் சதத்தைப் பூர்த்தி செய்தார்.

இதன் மூலம் அதிக ஓட்டங்கள் எடுத்த அவுஸ்ரேலிய வீரர்கள் பட்டியலில் ஹைடன் 10ஆவது இடத்தைப் பிடித்துள்ளார். 73ஆவது போட்டிகளில் விளையாடிய இவர் 6 ஆயிரத்து 227 ஓட்டங்களை எடுத்துள்ளார். இதில் 22 சதங்களை அடித்துள்ளார். அதிக ஓட்டங்கள் எடுத்த அவுஸ்ரேலிய வீரர்கள் வருமாறு -

| வீரர் | போட்டி | ஓட்டங்கள் | 100 | 50 | அ.ப. | சராசரி |
|---|---|---|---|---|---|---|
| போடர் | 156 | 11174 | 27 | 63 | 205 | 50.56 |
| ஸ்ரீவ் வோ | 168 | 10927 | 32 | 50 | 200 | 51.06 |
| மார்க் வோ | 128 | 8029 | 20 | 47 | 153* | 41.81 |
| ரெய்லர் | 104 | 7525 | 19 | 40 | 334* | 43.49 |
| டேவிட் பூன் | 107 | 7422 | 21 | 32 | 200 | 43.65 |
| பொண்டிங் | 94 | 7409 | 23 | 29 | 257 | 55.29 |
| கிரேக் சப்பல் | 87 | 7110 | 24 | 31 | 247* | 53.86 |
| லாங்கர் | 94 | 7023 | 22 | 28 | 250 | 45.90 |
| பிரட்மன் | 52 | 6996 | 29 | 13 | 334 | 99.94 |
| ஹைடன் | 73 | 6227 | 22 | 21 | 380 | 52.77 |

# தென்னாபிரிக்க பயிற்சி ஆட்டம்; நியூஸிலாந்து அணிக்கு வெற்றி!

போட்செப்ஸ்ரோம் —

பிளெமிங் தலைமையிலான நியூஸிலாந்து கிரிக்கெட் அணி தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகளிடையே 5 ஒருநாள் போட்டி மற்றும் 3 டெஸ்ட் போட்டி கொண்ட தொடர் நடைபெறவுள்ளது.

ஒருநாள் போட்டி எதிர்வரும் 23ஆம் திகதி குட் இயர்பார்க்கில் ஆரம்பமாகும்.

இதற்கு முன்னதாக நியூஸிலாந்து அணி நேற்றுமுன்தினம தென்னாபிரிக்க ஏ அணியுடன் மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து 231 ஓட்டங்கள் எடுத்தது. பிளெமிங் அபாரமாக ஆடி சதமடித்தார். அதன்பின் ஆடிய தென்னாபிரிக்க ஏ அணி 128 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. இதன் மூலம் நியூஸிலாந்து 103 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.




சர்வதேசத்துக்கு உடனுக்குடன்

# தமிழரின் வாழ்வியல் துன்பங்கள், துயரங்களை தமிழ்செய்தி தகவல்மையம் வெளிப்படுத்தவேண்டும்

மூத்த பத்திரிகையாளர் கோபு








யாழ்ப்பாணம் —

இன்று திறந்துவைக்கப்பட்ட இந்த தமிழ் செய்தித் தகவல் மையம் - எமது மக்களின் துன்ப துயரங்களை, வாழ்வியற் கோலங்களை உடனுக்குடன் உண்மையுடன் உலகுக்கு வெளியிடும் செய்தி நிறுவனமாக மிளிரவேண்டும் என மூத்த பத்திரிகையாளர் கோபு தெரிவித்தார்.

தமிழ் செய்தி தகவல் மையத்தின் திறப்புவிழா வைபவம் நேற்று முன்தினம் இல 180, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றவேளை மேற்படி நிறுவனத்தை நாடா வெட்டி திறந்துவைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தனது உரையில் -

ஏனைய செய்தி வெளியீட்டு நிறுவனங்கள் பலவும் எமது மக்களின் உண்மை நிலவரங்களை வெளியிடாது, உண்மைக்குப் புறம்பான செய்திகளை வெளியிட்டு வருகின்றன.

எனவே, இன்று ஆரம்பிக்கப்பட்ட இந்தச் செய்தி நிறுவனமானது முதன் முதலில் எமது பிரதேச, எமது மக்களின் உண்மைச் செய்திகளை வெளியிடும் நிறுவனமாகத் திகழவேண்டும் எனத் தெரிவித்தார்.

தொடர்ந்து பேராசிரியர் சண்முகலிங்கன் உரையாற்றுகையில் -

இது தகவல் யுகம். நமது வாழ்வியல் போராட்டத்துக்கு இந்தத் தகவல் மையம் தேவையான ஒன்றாகும். உலகில் பல செய்தி நிறுவனங்கள் வியாபார நோக்கத்துடன் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இந்த நிறுவனமானது எமது வாழ்வியலை மீட்கக்கூடிய ஒரு நிறுவனமாக சுயாதீனமாக இது செயற்படும்.

செய்திகள் ஒழுங்காகவும், தர்க்கரீதியாகவும், சுவைபடவும் வழங்கப்படவேண்டும். இதற்கு ஒர் செய்தியாளன் நல்ல மன நிலையில் இருந்து செய்தியைச் சேகரித்து எழுதவேண்டும். ஒருவன் நல்ல செய்தியாளனாக பெரிய பதவிகள் தேவையில்லை. அந்தத் துறையில் அவனுக்குள்ள நிபுணத்துவமே போதுமானது.

இந்தச் செய்தி நிறுவனமானது - எமது மக்களின் ஊடக அறிவை வளர்க்கும் மையமாகவும், எதிர்காலத்தில் ஏனைய செய்தி நிறுவனங்களுக்கு முன்னுதாரணமாகவும் அமைய வேண்டும் எனக் கூறினார்.

இந்த நிகழ்வில் தொடர்ந்து சட்டத்தரணி பொன். பூலோகசிங்கம் உரை நிகழ்த்துகையில் -

ஆரம்பத்தில் அச்சு ஊடகங்களே செய்திப் பரிமாற்றல் மையமாக விளங்கியது. அதிலிருந்து பெற்றெடுத்த குழந்தைகளாகவே இன்று இலத்திரனியல் ஊடகம், இணையம் என்பன விளங்குகின்றன.

பத்திரிகைகள் ஒரு நாட்டின் அரசாங்கத்தையே மாற்றவல்ல சக்தியாக விளங்குகின்றன. ஈராக்கில் கைதிகள் அமெரிக்கப் படையினரால் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டதை, லண்டன் பத்திரிகைகளே அம்பலப்படுத்தின.

ரைம்ஸ் ஒவ் இந்தியா பத்திரிகை- ராஜீவ் காந்தியின் ஊழலை வெளிக்கொண்டுவந்தது. அமெரிக்காவில் இருந்து வெளிவரும் தி வொஷிங்ரன் போஸ்ட் பத்திரிகை அந்த நாட்டின் ஜனாதிபதி நிக்ஸனைப் பதவி விலகச் செய்தது.

செய்திகள் அரசியல் சாயம் பூசப்படாது, உண்மை உரைப்பனவாக, புனிதமாக இருக்கவேண்டும். எனவே, இன்று திறந்து வைக்கப்படும் இந்த தமிழ் செய்தி தகவல் மையம் உண்மைச் செய்திகளை உலகுக்கு வெளிக் கொண்டுவரும் மையமாக விளங்கி, எதிர்காலத்திலும் சிறப்பாகக் கடமையாற்றவேண்டும் எனக் கூறினார்.

## நெடுந்தீவில் மலசலகூடங்கள் அமைத்துக்கொடுக்க ஏற்பாடு

நெடுந்தீவு —

நெடுந்தீவில் மலசலகூட வசதியற்ற வறுமைக்கோட்டின் கீழ் வாழும் தெரிவுசெய்யப்பட்ட 20 குடும்பங்களுக்கு யுனிசெப் நிறுவனத்தினரால் மலசலகூடங்கள் அமைத்துக்கொடுப்பதற்கான ஏற்பாடுகள் - நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனையினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவ்வாறு அமைக்கப்படும் ஒரு மலசலகூடத்துக்கென சுமார் 60 ஆயிரம் ரூபா வரையிலான தொகை யுனிசெப் நிறுவனத்தினால் வழங்கப்படவுள்ளதுடன், இதற்கான முற்பணக் கொடுப்பனவுகளையும் பயனாளிகளுக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகளும் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(113)

## கடற்தொழிலாளர் கூட்டுறவுச்சங்க உத்தியோகத்தருக்கான பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம் —

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் கடற்தொழில் திணைக்களம், கடற்தொழிலாளர் கூட்டுறவுச்சங்க நிர்வாக உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி வகுப்பு ஒன்றை இந்த மாதம் 27, 28 ஆம் திகதிகளில், யாழ்.மாவட்ட கடற்தொழில் நீரியல்துறை திணைக்கள உதவிப் பணிப்பாளர் அலுவலகத்தில் நடத்தவிருக்கிறது.

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் கடற்தொழில் திணைக்கள பதில் உதவி கடற்தொழில் பணிப்பாளர் எஸ்.சுதாகரன்- இரு நாட்களிலும் பயிற்சி வகுப்புகளை நடத்தவுள்ளார்.

ஒவ்வொரு கடற்தொழில் பரிசோதகர் பிரிவுகளிலிருந்தும் நான்கு பேருக்குக் குறையாத சங்க உறுப்பினர்களையும் இந்தப் பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ள ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (21)

## நிமலராஜனின் நினைவுதினம்

யாழ்ப்பாணம் —

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் 5 ஆம் ஆண்டு நினைவுதினக் கூட்டம்- இன்று பகல் 10 மணிக்கு பரமேஸ்வராச் சந்தியிலுள்ள சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையில் ஊடகவியலாளர் சங்கத் தலைவர் வே.தவச்செல்வம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நினைவுதினக் கூட்டத்தில் - கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பத்திரிகையாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு நினைவுரைகளை ஆற்றவுள்ளனர்.

## சின்னஞ்சிறு செய்திகள்

### இழப்பீட்டு கொடுப்பனவு வழங்கல்

நெடுந்தீவு —

நெடுந்தீவு பிரதேசத்தில் கடந்த வருடம் ஏற்பட்ட கடும் மழை காரணமாக- வீடுகள் சேதமடைந்தவர்களுக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவு கடந்த வாரம் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் வைத்து வழங்கப்பட்டது.

நெடுந்தீவு பிரதேசத்தைச் சேர்ந்த சுமார் 10 குடும்பங்களுக்கே இந்தக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. (113)

### ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்

நெடுந்தீவு —

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கான மாதாந்த அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் - எதிர்வரும் 20 ஆம் திகதி வியாழக்கிழமை பகல் 11.30 மணிக்கு பணிமனை மண்டபத்தில், உதவி அரசாங்க அதிபர் ம.பற்றிக் டிறஞ்சன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் நெடுந்தீவுப் பகுதியில் முன்னெடுக்கப்பட்டுவரும் வேலைத்திட்டங்கள் மற்றும் கல்வி, குடிநீர், போக்குவரத்து, மருத்துவம், தொழில்வளம் போன்றவை தொடர்பாக ஆராயப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.(113)

## நீண்டகாலமாக திருத்தப்படாத புனித யாகப்பர் ஆலய வீதி

நெடுந்தீவு —

நெடுந்தீவு மத்தி மேற்குப் பகுதியில் உள்ள புனித யாகப்பர் ஆலய வீதி - நீண்டகாலமாக திருத்தம் செய்யப்படாமல் குன்றும் குழியுமாகக் காணப்படுவதால், அந்த வீதியூடாகப் பயணிக்கும் மக்களும், யாகப்பர் ஆலயத்துக்குச் செல்லும் மக்களும் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இதேவேளை, பழமையும் புதுமையும் நிறைந்த புனித யாகப்பர் ஆலயத்துக்கான இந்த வீதி திருத்தம் செய்யப்படவேண்டும் என்பதுடன், ஆலயப்பகுதிக்கு மின்விநியோகம் வழங்கப்பட வேண்டும் எனவும் அந்தப் பகுதி மக்களும், ஆலய பங்காளர்களும் கோரிக்கை விடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(113)

## கடற்தொழில் சங்க முகாமையாளர்கள் 20 பேருக்கு ஐந்து நாள் பயிற்சி நெறி

யாழ்ப்பாணம் —

வடமாகாணத்திலுள்ள நான்கு மாவட்டங்களில் தற்போது விற்பனைத் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள கடற்தொழில் கூட்டுறவுச் சங்கங்களது தொழில் முன்னேற்றத்தைக் கருத்திற் கொண்டு - இந்தச் சங்கங்களை முகாமை செய்பவர்களுக்கு தொழில் முன்னேற்றம் தொடர்பான ஐந்து நாட்கள் கொண்ட பயிற்சியை 20 பேருக்கு வழங்க வடக்கு - கிழக்கு மாகாண விவசாய, காணி, கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசன, கடற்தொழில் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

யாழ்ப்பாணம் -11 பேர், மன்னார் - 5 பேர், கிளிநொச்சி - 2 பேர், முல்லைத்தீவு- 2 பேர் என மொத்தம் 20 பேர் இப்பயிற்சி நெறிக்கு தெரிவாகியுள்ளனர்.

இந்தப் பயிற்சியைப் பயிற்ற வேண்டிய விற்பனையில் ஈடுபட்டுள்ள சங்கங்களையும், பயிற்சியாளரையும் தெரிவு செய்து உடன் அனுப்புமாறு உதவி மீன்பிடிப் பணிப்பாளர் எஸ்.சுதாகரன் ஒவ்வொரு மாவட்ட கடற்தொழில் நீரியல்வளத் துறை உதவிப் பணிப்பாளர்களைக் கேட்டுள்ளார்.

இது ஒரு சர்வதேச தொழில் ஸ்தாபனத்தின் பயிற்சித் திட்டமாகும். இப்பயிற்சியில் கலந்துகொள்ளும் பயிற்சியாளர்களுக்கு பெறுமதிமிக்க கையேடுகள் வழங்கப்படவிருக்கின்றன. (21)

### கண்ணாடியிழை படகுகள் அன்பளிப்பு

நெடுந்தீவு —

நெடுந்தீவிலுள்ள வறிய மீனவர்களுக்கு, கியூமெடிக்கா நிறுவனத்தினர் பத்து கண்ணாடியிழைப் படகுகளை இலவசமாக வழங்கியுள்ளனர்.

நெடுந்தீவிலுள்ள 5 கடற்தொழில் சங்கத்திலுமுள்ள தலா இரு வறிய மீனவர்கள் தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்கே இந்தப் படகுகள் வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை, இந்த நிறுவனத்தால் ஏற்கனவே தேவசபை அமைப்பினூடாக வெளியிணைப்பு இயந்திரம், படகு, மீன்பிடி உபகரணம் போன்றன வழங்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (113)

80 லட்சம் ரூபா செலவில்

## கமநல சேவைகள் நிலையம் மானிப்பாயில் அமையவுள்ளது

உடுவில் —

மானிப்பாயில் புதிய கமநல சேவைகள் நிலையம் 80 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளது.

இதற்கென மானிப்பாயைச் சேர்ந்த சட்டத்தரணி இ.வசந்தசேனன் காணியை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

மானிப்பாய் - டச்சு வீதியில் அமைக்கப்படவுள்ள கமநல கேந்திர நிலையத்துக்கான இடத்தை வலி.தென்மேற்கு பிரதேச செயலர் ரூபினி வரதலிங்கம், உதவிப் பிரதேச செயலர் திருமதி ஏ.அன்ரன் யோகநாயகம், மானிப்பாய் பிரதேச சபைச் செயலாளர் மேரி ஜோசெப் சாந்தசீலன் ஆகியோர் சென்று பார்வையிட்டனர்.

கமநலசேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் க.சுந்தரேசன், கட்டடம் அமைப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். (101)




# லண்டன் திரைப்பட விழாவில் 'காதல்' தமிழ்ப்படம்



லண்டனில் நடைபெறும் 49 ஆவது திரைப்பட விழாவில், தமிழர்கள் பெருமையுடன் கலந்துகொள்ளலாம். அங்குவரும் பார்வையாளர்களிடம் உரிமையுடன் கலந்துரையாடலாம். காரணம், இயக்குநர் பாலாஜி சக்திவேல்.

வியாபாரக் குப்பைகளையே சினிமாவாக எடுத்துக்கொண்டிருக்கும் வேளையில், தமிழ் சினிமாவில் பெய்த ஆலங்கட்டிமழை, காதல்! இரு அரும்பு உள்ளங்களில் மலர்ந்த காதலை, மிகையில்லாமல் காட்சிப்படுத்திய சிறந்த படைப்பு இது. உள்ளூர் ஜனங் களின் ஒட்டுமொத்தப் பாராட்டைப் பெற்ற காதல் - வெளிநாட்டு ரசிகர் களைப் பரவசப்படுத்த கடல் கடந்து செல்கிறது.

லண்டனில் இந்தமாதம் 19 ஆம் திகதிமுதல் நவம்பர் 3 ஆம் திகதிவரை நடக்கும் திரைப்பட விழாவில், ஒக்ரோபர் 21, 24 ஆம் திகதிகளில் "காதல்" திரையிடப்படுகிறது.

ஷங்கரின் எஸ் பிலிம்ஸ் தயாரித்த இந்தப் படத்தைக் குறித்து, சர்வதேச பார்வையாளர்கள் முன்பு பேசுகிறார் இயக்குநர் பாலாஜி சக்திவேல்.

உலக அரங்கில் தமிழ் சினிமா தலைநிமிராமல் இருப்பதற்குக் காரணம்- அதன் போலியான செயற்கைத்தனமேயாகும். இதன் உச்சம் என்று நமது சினிமா பாடல்களை கூறலாம்.

"ஆட்டோகிராஃப்" சர்வதேச திரைப் பட விழாக்களில் கலந்துகொண்ட போது அந்தப் படத்தின் பாடல்கள் எடிட் செய்யபபட்டன. காதல் படத்துக்கு அப்படி நேருமா? தெரியவில்லை!

தமிழ்ப்படம் ஒன்று உலக அரங்கில் நுழைவதை தமிழ் ரசிகர்களின் ரசனையில் ஏற்பட்டுள்ள நல்ல மாற்றம் என்றுதான் கூறவேண்டும்.

# சிக்கலான ஆபரேஷன்



தலை ஒட்டிப்பிறந்த இரட்டைச் சிறுமிகளை, உயிரோடு பிரிக்க 60 டொக்டர்கள் சேர்ந்து 9 மாதம் சத்திரசிகிச்சை நடத்தத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. பிகாரைச் சேர்ந்த 10 வயதையுடைய இரட்டைச் சிறுமிகளைப் பிரிக்கும் மருத்துவச் செலவை ஏற்க அபுதாபியின் பட்டத்து இளவரசர் ஷேக் முகமது முன்வந்துள்ளார்.


டெல்லி அப்பல்லோ மருத்துவமனையில் செய்யப்பட்ட சிகிச்சையில் ஒரு சிறுமிக்கு இருக்கவேண்டிய 2 சிறுநீரகங்களும் மற்றச் சிறுமிக்கு இருப்பதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை மூளைக்குச் செல்லும் ரத்தக்குழாய் ஒன்றும் இருப்பதாகக் கூறப்படுகிறது. ஏறக்குறைய 4.25 கோடி செலவு இந்தச் சத்திரசிகிச்சைக்கு ஏற்படும் எனக் கருதப்படுகிறது.

இது 6 கட்டமாக நடைபெறும் சத்திரசிகிச்சை எனவும் மிகவும் நிதானமாகவும், கவனமாகவும் செய்யவேண்டிய ஒன்றெனவும் வைத்தியர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். உண்மையில் இது ஒரு சிக்கலான ஆபரேஷன்தான்.


# எஸ்.எம்.எஸ்சில் பைபிள்

அவுஸ்ரேலியாவில் கையடக்கத் தொலைபேசிகள் ஊடாக பைபிள் வாசகங்களை மொழிபெயர்த்து எஸ்.எம்.எஸ் தகவல்களாக பரிமாறும் புதிய நடைமுறை ஒன்று வந்துள்ளது. பைபிளின் 31 173 வசனங்களும் இலவசமாக டவுன்லோட் செய்து, அவற்றைக் கையடக்கத்தொலைபேசிகள் ஊடாக தகவல்களாகப் பரிமாற முடியும் என, அவுஸ்ரேலிய பைபிள் கழகப் பேச்சாளர் தெரிவித்தார். கறுப்புத் தடித்த அட்டையின் மீது சிலுவை பொறிக்கப்பட்ட பைபிள் நூல்களாக இருந்த காலம் மாறி, இப்போது நவீன தொழில் நுட்பத்தினூடாக அவற்றை மக்களிடம் சென்றடையச் செய்கிறோம் என அவர் குறிப்பிடுகிறார். இது நல்ல பயனை ஈட்டித்தருவதாகவும் கூறப்படுகிறது.





# தொலைக்காட்சி மீதான அமெரிக்கரின் மோகம்

உறங்குவதற்கு எடுக்கும் நேரத்தை விட, ஓர் சராசரி அமெரிக்கன் - தொலைக்காட்சி பார்ப்பதற்கும், இன்ரநெட் பார்ப்பதற்கும் செலவிடும் நேரம் அதிகமானது என அண்மைய ஆய்வு ஒன்று கூறுகிறது. ஒரு நாளில் தொலைக்காட்சி, இன்ரநெட், தொலைபேசி என்பவற்றுக்காக ஒன்பது மணிநேரத்தை அமெரிக்கர்கள் செலவிடுகின்றனர். போல் மானிலப் பல்கலைக்கழக பேராசிரியர் ஒருவர் இந்த ஆய்வை மேற்கொண்டுள்ளார். கடந்த 10 ஆண்டுகளில் இவ்வளவு அதிகமாக இவற்றுக்கு செலவிடும் நேரம் அதிகரித்திருப்பதாக அவர் கூறுகிறார். அமெரிக்கர்கள் பல நவீன தொடர்பு சாதனங்களை கையாள்வதில் ஆர்வம் காட்டினாலும், தொலைக்காட்சி பார்க்கும் அவர்களது ஆர்வம் இன்னமும் குறைந்து விடவில்லை. தொலைக்காட்சிக்கு அடுத்ததாகவே கம்பியூட்டருடன் அவர்கள் காலம் கழிக்கின்றனர். எனினும், அங்கு எவரும் தொலைக்காட்சியால் அமெரிக்க கல்வித்தரம் வீழ்ச்சியடைந்துவிட்டதாக ஒப்பாரி வைக்கவில்லை.



# வால் நட்சத்திரங்கள்

வால் நட்சத்திரங்கள் மிகவும் பழமையான காலத்தில் உருவாகியவைகளாகும். சுமார் 450 கோடி ஆண்டுகளுக்கு முன் சூரியன் உருவான காலத்தில் அதனிடமிருந்து வீசப்பட்ட தூசுத் துணிக்கைகளும், வாயுக்களும் ஒன்றுகூடி ஒன்பது கிரகங்கள் உருவாகின. இப்படித்தப்பியதூசுத் துணிக்கைகள் இன்றும் சூரியனைச் சுற்றி வருகின்றன.



அவையே வால் நட்சத்திரங்கள் எனப்படுகின்றன.

பூமியிலிருந்து 600 கோடி கிலோ மீற்றர் தொலைவில் புளூட்டோ கிரகத்தைத் தாண்டியிருக்கும் குலிப்பர் பெல்ட் மற்றும் ஊர்ட்மேகம் எனப்படும் பகுதியிலிருந்தும் வால் நட்சத்திரங்கள் வருகின்றன. வால் நட்சத்திரத்தின் தலைப்பகுதி மிகப்பெரிய பாறையாகும். அதனுடைய வால்ப்பகுதியே தூசுத்துணிக்கைகளால் இருக்கும். வியாழன் போன்ற பெரிய கிரகங்களின் அருகில் செல்லும்போது வால் நட்சத்திரங்கள் அழிகின்றன.

# செல்லப்பிராணிகளால் ஆபத்து


செல்லப் பிராணிகள் இல்லாத வீடே இல்லை என்று கூறலாம். அந்தளவுக்கு உலகளாவிய ரீதியில் செல்லப்பிராணிகள் அதிகரித்துக் காணப்படுகின்றன.



வீடு முழுவதும் அலைந்து திரிகின்ற செல்லப்பிராணிகளைக் கட்டுப்படுத்தவேண்டும் என மிருக வைத்தியர்கள் எச்சரிக்கை செய்கிறார்கள். செல்லப்பிராணிகளின் உடலில் பெருமளவு பக்றீரியாக்கள் உள்ளன. செல்லப்பிராணிகளைத் தொட்டுத் தூக்கும் பொழுது அவை எமது உடலில் புகுவதற்கு வாய்ப்பாகிறது.

அமெரிக்காவில் சிறுவர்கள் எலிகள் மீது பாசம் வைத்து அதனைக் கொஞ்சி மகிழ்வதால், சல்மொனில்லா என்ற தொற்றுநோய் அந்தச் சிறுவர்களுக்கு ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. இந்தநோய் உண்மையில் கெட்டுப்போன உணவுகளாலேயே ஏற்படுகிறது எனக் கூறப்படுகிறது. மனிதர்களின் குடல்களிலுள்ள கிருமிகளைவிட விலங்குகளின் குடல்களிலுள்ள கிருமிகள் மிகவும் பயங்கரமானவை. ஆபத்தானவை


# சுப்பசொனிக் பயணிகள் விமானம் தயாரிப்பில் ஜப்பான் தீவிரம்




புதிய மிகையொலி (Supersonic) ஜெட்விமானம் ஒன்றை உருவாக்கும் பரீட்சார்த்த முயற்சியில் ஜப்பானின் விண்வெளி ஆய்வுக் கழகம் (Jaxa) இறங்கியுள்ளது. கடந்த வாரம் 11 மீற்றர் நீளமான விமான மாதிரியொன்று அவுஸ்திரேலிய பாலைவனம் ஒன்றிலிருந்து ரொக்கட் மூலம் ஏவப்பட்டது. இதன் மூலம் மிகையொலி விமான தொழில்நுட்ப வளர்ச்சியில் புதியதோர் பரிணாமம் கிட்டியுள்ளதாகக் கழக விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

இதுபோன்று விமானத்தை பயன்படுத்தும் காலத்தில் ரோக்கியோவிலிருந்து நியூயோர்க்குக்கு தற்போதைய நேரத்தைவிட, அரைவாசி நேரத்தில் சென்றடையலாம் எனக் கூறப்படுகிறது. இந்த விமானம் சாதாரண பாவனைக்கு 2020 ஆம் ஆண்டுக்குப் பின்பே வரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.


# ஐரோப்பாவை கலக்கும் ஜப்பானிய ரோபோக்கள்



ஜப்பானியர்களின் அதிகரித்த ரோபோக்களின் உற்பத்தி, ஐரோப்பிய சந்தையில் வந்து குவிவதால், ஐரோப்பிய யூனியன் `கதி கலங்கியுள்ளது. ஜப்பானின் நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய இந்த இயந்திர மனிதர்களுக்கு (Robot) ஐரோப்பிய நாடுகளிடையே நல்ல மதிப்பு ஏற்பட்டுள்ளது. ஐரோப்பிய நாடுகளின் மந்தமான ரோபோ உற்பத்தியை, ஜப்பானின் மிதமிஞ்சிய ரோபோக்களின் வருகை படுக்க வைத்துவிட்டதாகவே ஐரோப்பிய யூனியன் கருதுகிறது. இதனால் ரோபோ உற்பத்தி மற்றும் ஆராய்ச்சியை விரைவுபடுத்துமாறு தனது உறுப்பு நாடுகளை ஐரோப்பிய யூனியன் கேட்டுள்ளது. ஜப்பானின் தொழில் நுட்பத்துடன் எம்மால் போட்டியிட முடியாது என, ஐரோப்பிய யூனியனின் தொழில் நுட்ப இயக்குநர் கூறுகிறார்.



# மதுவும் கவலையும்




கவலையை மறக்க மது அருந்துவதன் பின்னணி என்ன என்பது குறித்து, அமெரிக்க ஆராய்ச்சியின் முடிவில் மிகவும் ருசிகரமான தகவல்கள் வெளியாகியுள்ளன. குடிப்பழக்கத்துக்கு ஆளானவர்களில் பெரும்பாலானவர்கள் கவலையை மறக்கக் குடிப்பதாகக் கூறுவது வழக் கம் அல்லவா?

மனக்கவலைக்கான மது அடிமைப்பின்னணி குறித்து அமெரிக்காவின் சிக்காக்கோ நகரிலுள்ள இல்லனாய்ஸ் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் ஆராய்ச்சி செய்துவந்தனர். மூளையிலுள்ள புரோட்டின் அளவுக்கும், ஒருவரது மனக் கவலைக்கும் குடிப்பழக்கத்துக்கும் இடையே முக்கிய தொடர்பு இருப்பதாகக் கூறப்படுகிறது.

அதிகளவு மது கொடுக்கப்பட்ட, எலிகள் ஆய்வுக்காக எடுக்கப்பட்டன. அப்போது எலிகளில் மிகவும் மனவருத்தத்துடன் இருந்த எலிகள் அதிகமாகக் குடிப்பதாகக் கூறப்படுகிறது. இதற்குக் காரணம் மூளையின் மத்திய பகுதியிலுள்ள கிரெப்புரோட்டின் அளவுதான் என அறியப்பட்டுள்ளது.

# பறக்கும் விலங்குகள்




பறவைகள் மட்டுமல்ல விலங்குகள்கூடப் பறப்பதாகக் கூறப்படுகிறது. ஆதி காலத்தில் பறவைகள் போல சிலடைனோசர்கள் பறந்திருக்கின்றன. சில வெளவால்கள் பெரிய டென்ட் போன்ற அமைப்புக்கொண்டவையாகக் காணப்படுகின்றன. இப்படியான வெளவால்கள் தென்னமெரிக்காவில் பெரும்பாலும் காணப்படுகின்றன. இவற்றில் சில இந்தியா மற்றும் தென்கிழக்காசிய பகுதிகளில் வாழ்கின்றன. இதைவிடப் பறக்கும் அணில்களும் உலகில் காணப்படுகின்றன. சிலவேளைகளில் 1500 அடி நீளம்வரை இந்தப் பறக்கும் அணில்கள் பயணம் செய்வதாகக் கூறப்படுகிறது. இவை பகலில் உறங்கி இரவில் வெளியே வருகின்றன. பறக்கும் அணில்களை ஆந்தைகள், மலைப் பாம்புகள் ஆகியன வேட்டையாடுவதால் இவை தரைக்கு வரப் பயப்படுகின்றன. இவற்றை அதி நவீன கமராக்களாலேயே படம் பிடிக்கமுடியும் எனக் கூறப்படுகிறது.

# இமயமலை உச்சி சுருங்குகிறது



பொதுவாக மலைகள் ஆண்டுதோறும் வளர்வதாக விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். ஆனால், இமயமலை சுருங்கிக்கொண்டு வருவதாகக் கூறப்படுகிறது. உலகின் மிக உயர்ந்த மலைச் சிகரமாகிய எவரெஸ்டின் தற்போதைய உயரம் 8844.43 மீற்றர்.

1975 ஆம் ஆண்டைக் காட்டிலும் இது 3.7 மீற்றர் குறைந்திருப்பதாகக் கூறப்படுகிறது. சீனாவில் எவரெஸ்ட் சிகரத்தை குவோமோலாங்மா என அழைக்கிறார்கள். செயற்கைக் கோள் மற்றும் உயர் தொழில்நுட்ப வசதிகள் மூலம் எவரெஸ்ட் சிகரம் கணக்கெடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இத்தகைய ஆய்வுகளில் சீனா மட்டுமே ஈடுபட்டுக் கொண்டு வருகிறது. உண்மையில் எவரெஸ்ட் சிகரம் நேபாளத்தில் அமைந்திருந்தாலும், சீனா நேபாளத்தின் உதவியை நாடவில்லை. சீன நில அளவையாளர்கள் 50 பேர்கொண்ட குழு இத்தகைய சுருங்கலை உறுதிப்படுத்தியுள்ளனர்.



# பனி ஆய்வு செய்மதி கடலினுள் வீழ்ந்தது

வெப்பநிலை மாற்றத்தினால் துருவங்களில் பனிப்பாறைகளுக்கு ஏற்படும் மாற்றம், அவற்றின் நகர்வு என்பவற்றை ஆராய்வதற்காக ஐரோப்பிய விண்வெளி ஆய்வுக் கழகம் அனுப்பிய cryosat என்ற விண்கலம் ஏவி சில நேரத்துக்குள்ளேயே கடலினுள் வீழ்ந்துவிட்டது.

வட ரஷ்யாவிலிருந்து ஏவப்பட்ட இந்தச் செய்மதி, ஆர்ட்டிக் சமுத்திரத்தினுள் வீழ்ந்தது. கடந்த 8 ஆம் திகதி செலுத்தப்பட்ட இந்தச் செய்மதி இரண்டாக பிளவுபட்ட பின்பே கடலினுள் வீழ்ந்ததாகக் கூறப்படுகிறது.

இந்தத் திட்டத்துக்காக பல வருடங்களாக உழைத்த விஞ்ஞானிகளுக்கு இந்தச் செய்தி பேரிடியாக விழுந்துள்ளது.

ரொக்கட்டின் மேற்பகுதியிலிருந்து தன்னை விடுவித்த பின்பே செய்மதி கடலினுள் வீழ்ந்துள்ளது.

# காலநிலை மாநாடு ஒத்திவைப்பு

ஆசிய- பசுபிக் காலநிலை தொடர்பாக ஆராய அவுஸ்ரேலியாவில் அடுத்த மாதம் நடைபெறவிருந்த முதல் மாநாடு ஒத்திவைக்கப்படலாம் எனக் கூறப்படுகிறது. இந்த மாநாட்டின் பின்னர், நேசநாடுகள் தாம் வெளிவிடும் காபனீரொட்சைட்டு வாயுவின் அளவை புதிய தொழில் நுட்ப அறிவு மூலம், குறைத்துக் கொள்ள வலியுறுத்தப்படவிருந்தது.



அவுஸ்ரேலியாவில் நடைபெறவிருந்த இந்தமாநாடு நவம்பர் கடைசி வாரத்தில் மொன்றியலில் நடைபெறும் ஐ.நா.வின் காலநிலை தொடர்பான மாநாட்டின் பின்னரே - ஜனவரியில் நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

# ஐரோப்பிய ஒன்றியத்தின் முடிவை மீள்பரிசீலனை செய்ய வேண்டும்

## வவுனியா தமிழ் மாணவர் ஒன்றியம்

வவுனியா—

ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கத்துவம் வகிக்கும் நாடுகளுக்குத் தமிழீழ விடுதலைப்புலிகள் பயணம் மேற்கொள்வதை ஐரோப்பிய ஒன்றியம் தடைவிதித்துள்ளமையை வவுனியா மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் வன்மையாகக் கண்டிக்கிறது.

இந்தத் தடையை நீக்கவேண்டும் என வலியுறுத்தி, வவுனியா மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளதுடன்பல தசாப்தங்களாக சிங்கள பேரினவாதமும், அது சார்ந்த இலங்கை அரசும் தமிழ் மக்கள் மீது திட்டமிட்ட வகையில் அடக்குமுறைகளை ஏற்படுத்தி வருகிறது.

இந்த அதிகாரவேலைக்கு வலுவூட்டும் வகையில், சிங்கள பேரினவாதம் மேற்கொள்ளும் விஷமப் பிரசாரத்தால் தமிழ் பேசும் மக்களின் ஏகபிரதிநிதிகளாகிய தமிழீழ விடுதலைப் புலிகளை ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் நாடுகளுக்கு பயணம் மேற்கொள்ள ஐரோப்பிய ஒன்றியம் தடைவிதித்துள்ளமையானது- தமிழ் பேசும் மக்களை பெரும் விரக்திக்குள்ளாக்கியுள்ளது. இதனால் சமாதானப் பேச்சுகளுக்கு இடையூறு ஏற்பட்டுள்ளது.

இந்தத் தடையானது- இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சிகளின் தேக்கத்தினையும், பாதிப்பையும் ஏற்படுத்துவதாக அமைகிறது.

சிங்கள பேரினவாதத்தின் இனச் சுத்திகரிப்புக்கு ஆதரவாக ஐரோப்பிய ஒன்றியம் செயற்படுமாக இருந்தால், ஐரோப்பிய ஒன்றியத்தின் மீதான நம்பிக்கையைத் தமிழ் மக்கள் இழந்துவிடுவார்கள் என்பதைச் சுட்டிக் காட்டுகிறோம்.

இந்தத் தடையை வவுனியா மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியத்தவராகிய நாம் மிக வன்மையாகக் கண்டிக்கிறோம்.

ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் எமது தாயக பிரதேசங்களுக்கு விஜயம் மேற்கொண்டு, எமது பிரதேசத்தின் உண்மை நிலையைப் புரிந்துகொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொளவதுடன், உடனடியாக எமது ஏகபிரதிநிதிகளாகிய தமிழீழ விடுதலைப்புலிகள் மீது விதித்துள்ள தடையை நீக்கி, எமது நியாயபூர்வமான விடுதலைப் போராட்டத்துக்கு அங்கீகாரத்தை வழங்குமாறும் கேட்டுக்கொள்கிறோம் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சிதைவடையும் நிலையில் அல்லிராணி கோட்டை

மன்னார்—

மன்னார் மாவட்டத்திலுள்ள வரலாற்றுப் பதிவான அல்லிராணி கோட்டை சிதைவடைந்து வருவதாக பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்தக் கோட்டை கடல் அரிப்புக்குள்ளாகி சிதைவடைந்துள்ளதால், அழிவடையும் நிலை யில் உள்ளதாக மன்னார் மக்கள் பொது அமைப்புகளின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளனர்.

தமிழர் தாயகத்தில் தமிழ்ப் பெண்ணின் வரலாற்று விழுமியமான இந்தக் கோட்டை பாதுகாக்கப்படவேண்டியது அவசியமானது எனச் சுட்டிக்காட்டினார். (அ)

# மேஜர் முரளி முன்பள்ளி சிறார்களின் கலை நிகழ்வுகள்





கிளிநொச்சி—

மேஜர் முரளி முன்பள்ளி சிறார்களின் கலைவிழா நேற்று முன்தினம் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில்; பிற்பகல் 2 மணிக்கு ஆசிரியர் தி.பரஞ்சோதி தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் தேசியக் கொடியை செஞ்சோலை சிறுவர் இல்லப் பொறுப்பாளர் ந. ஜனனி ஏற்றி வைத்தார். அதனைத் தொடர்ந்து- முன்பள்ளி கல்வி மேம்பாட்டுக் கொடியை முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி. கணேசலிங்கம் ஏற்றிவைத்தார். முன்பள்ளிக் கொடியை முன்பள்ளி முதல்வர் ஏற்றிவைத்தார்.

ஆரம்ப நிகழ்வைத் தொடர்ந்து அரங்க நிகழ்வு இடம் பெற்றது. இந்த நிகழ்வில் வரவேற்புரையை முன்பள்ளி மாணவர்கள் நிகழ்த்தினர். ஆசியுரையை றெஜினோல்ட் அடிகளார் நிகழ்த்தினார். தொடர்ந்து கலைநிகழ்வுகள் இடம் பெற்றன.

# தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் இரண்டு முன்பள்ளிகள் திறந்துவைப்பு

மன்னார்—

மன்னார் மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால், டென்மார்க் அகதிகள் பேரவையின் நிதிப்பங்களிப்புடன் மாந்தை மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவின்- நெடுங்கண்டல், அடம்பன் ஆகிய கிராமங்களில் நேற்று முன்தினம் இரண்டு முன்பள்ளிக் கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டன.

அடம்பன் முன்பள்ளிக் கட்டடத்திறப்பு விழா- காலை 11 மணிக்கும், நெடுங்கண்டல் முன்பள்ளி நண்பகல் 12 மணிக்கும் திறந்து வைக்கப்பட்டன.

இரண்டு முன்பள்ளிகளையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட மன்னார் மறை மாவட்ட ஆயர் அதி வணக்கத்துக்குரிய இராயப்பு ஆண்டகை நாடாவை வெட்டித் திறந்து வைத்து, சிறப்புரையாற்றினார்.

அடம்பன் சென். மேரிஸ் முன்பள்ளி நிகழ்வில்- பொதுச் சுடரை மாவீரர் மேஜர் கிச்சாரின் தாயார் ஏற்றிவைத்தார். தமிழீழ தேசியக் கொடியை மன்னார் மாவட்ட அரசியற்துறை மகளிர் பொறுப்பாளர் நிலவரசி ஏற்றிவைத்தார். தமிழர் புனர்வாழ்வுக் கழகக் கொடியை மன்னார் மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் அ.கேசவன் ஏற்றிவைத்தார். முன்பள்ளிக் கொடியை முன்பள்ளி ஆசிரியை ஏற்றி வைத்தார்.

நெடுங்கண்டல் அந்தோனியார் முன்பள்ளி திறப்பு விழா நிகழ்வில், பிரதம விருந்தினர்களை முன்பள்ளி சிறார்கள் மாலை அணிவித்து வரவேற்றனர்.

இந்த நிகழ்வில் பொதுச் சுடரை மாவீரர் கப்டன் ஆனந்தியின் தாயார் ஏற்றிவைத்தார். தமிழீழ தேசியக் கொடியை அடம்பன் பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் இனியவன், தமிழர் புனர்வாழ்வுக் கழகக் கொடியை பொறியியலாளர் த. காண்டீபன், முன்பள்ளிக் கொடியை முன்பள்ளி ஆசிரியர் ஆகியோர் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து வரவேற்புரை, தலைமையுரை என்பன இடம் பெற்றன.

இந்த நிகழ்வில் கருத்துரையை மன்னார் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இனியவன், தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணிப்பாளர் அ. கேசவன், அடம்பன் மத்திய மகாவித்தியாலய அதிபர் கிறிஸ்ரியான், அடம்பன் பங்குத் தந்தை வண பிதா இராசநாயகம் அடிகளார் ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வின் சிறப்புரையை மன்னார் மாவட்ட ஆயர் அதி வணக்கத்துக்குரிய இராஜப்பு ஜோசப் ஆண்டகை நிகழ்த்தினார்.

# "பசுந்தேசம்" ஒலிப்பேழை வெளியீட்டு விழா

மன்னார்—

தமிழீழ பொருண்மிய மேம்பட்டு நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட 'பசுந்தேசம்' ஒலிப்பேழை வெளியீட்டு விழா- நாளை காலை 10 மணிக்கு ஆண்டான் குளம் றோமன் அ.த.க. பாடசாலையில் நடைபெறவுள்ளது.

# காலச் சுவட்டில்...

## இன்றைய நாளில் அன்று நிகழ்ந்தவை

### ஒக்ரோபர்-18

1756 : கார்மோட்டா தீவுக்கு நியூ.ஸீ.லாண்ட் என பெயர் சூட்டப்பட்டது. நிக்கோபர் தீவிலிருந்து நான்கௌரி தீவு, பின்னர் அதனையும் கைவிட்டு கார்மோட்டா தீவு என வந்து குடியேறிய டச்சுக்காரர்கள் அந்தத் தீவுக்கு நியூஸிலாந்து எனப் பெயர் சூட்டிக்கொண்டனர்.

1799 : முதன் முதலாக பாரிஸில் ஜென்சி ஜெனீவ் கார்னெரின் என்ற பெண் பலூன் மூலம் மிக மிக உயரச்சென்று, பரசூட் மூலம் கீழே குதித்தார்.

1851 : பிரிட்டனில் முதன் முதலாக கடல் கடந்த நாடுகளுடன் தந்தித் தொடர்பு ஏற்படுத்தப்பட்டது.

1867 : ஏற்கனவே ரஷ்யாவிடம் இருந்து 72,00,000 டொலருக்குக் கொள்வனவு செய்யப்பட்டிருந்த அலெஸ்கா தீவு அதிகார பூர்வமாக அமெரிக்காவிடம் ஒப்படைக்கப்பட்டது.

1871 : கணிப்பீட்டு இயந்திரத்தைக் கண்டுபிடித்தவரும், கணனியின் முன்னோடியுமான பிரிட்டனைச் சேர்ந்த சார்லஸ் பாப்பேஜ் காலமானார்.

1873 : அமெரிக்க கால்பந்து விதிமுறைகள், கொலம்பியா, பிரிட்டன், ட்ரகர் ஏல் ஆகிய மாநிலப் பிரதிநிதிகளால் வரையப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டன.

1906 : அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தை கடும் சூறாவளி தாக்கியது. நூற்றுக்கணக்கானவர்கள் உயிரிழந்தனர்.

1911 : குழந்தைகளது நுண்ணறிவுச் சோதனைக்கு வழிமுறைகளை வகுத்துத் தந்த பிரான்ஷிய உளவியலாளர் அல்பிரட் பீனெட் (ALFRED BINET) காலமானார்.

1912 : பல்கேரியா, செர்பியா, கிரீஸ் ஆகிய நாடுகளுக்கும், துருக்கிக்கும் இடையிலான முதலாவது பால்கன் போர் ஆரம்பமாகியது.

1918 : சமாதானம் தொடர்பாக ஆஸ்திரியா அனுப்பிவைத்த திட்டத்தை அமெரிக்க அதிபர் உட்ரோ வில்சன் நிராகரித்தார்.

1922 : B.B.C நிறுவப்பட்டது. ஆரம்பத்தில் இது பிரித்தானிய ஒலிபரப்புக் கம்பனி என்றே அமைக்கப்பட்டது. பின்னரேயே பிரித்தானிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமாக மாற்றப்பட்டது.

1931 : தோஸ் அல்வா எடிசன் அமெரிக்காவின் நியூயோர்க்கில் காலமானார். ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொருட்களைக் கண்டுபிடித்துத் தந்து விட்டுச் சென்றுள்ளனர்.

1938 : பிரிட்டிஸ் அரசு ஜெருசலேமில் இராணுவச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்தது.

1940 : பிரான்ஸ் யூத எதிர்ப்புச் சட்டத்தை நிறைவேற்றியது. இந்தச் சட்டத்தின்படி யூதர்களை அரச அலுவலகங்களில் மட்டுமன்றி, தொழிற்சாலைகள் மற்றும் பொறுப்பான இடங்களில் வேலைக்கு அமர்த்தத் தடை கொண்டுவரப்பட்டது.

1955 : கலிபோர்னியா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த எமிலியோ செக்ரி என்பவரால் எதிர் புரோட்டன் என்னும் அணு நுண்துகள் கண்டு பிடிக்கப்பட்டது.

1967 : ரஷ்யாவினால் ஜூன் 12 ஆம் திகதி வெள்ளிக்கிரகத்தை நோக்கி அனுப்பப்பட்ட வெனீரா - 14 என்ற விண்கலம் வெள்ளிக்கிரகத்தின் அருகில் (45000 கிலோ மீற்றர் தூரத்தை) சென்றடைந்தது. அங்கிருந்து அது ஒரு கோளிறங்கு கலத்தை பரசூட் மூலம் வெள்ளிக் கிரகத்தில் இறக்கியது. இந்தக் கோளிறங்கு கலம் 94 நிமிடங்கள் தொடர்ச்சியாக வெள்ளிக்கிரக வளிக்கோளம் பற்றிய தகவல்களைத் திரட்டி அனுப்பிவைத்தது. வெள்ளிக்கிரக வளிக்கோளம் பற்றிய தகவல்களை பூமிக்கு அனுப்பிவைத்த முதல் கோளிறங்கு கலம் இதுவாகும்.

1973 : இஸ்ரேலியர்களுக்கும், எகிப்துக்கும் இடையே கடுமையான போர் நடந்தது. எகிப்தியப் படைகள் 90 வரையான கவச தாங்கிகளை இழந்து பின்வாங்கினர்.

1980 : முதன் முதலாக 5377.9 கிலோ மீற்றர் தூரத்தைக் கடக்கும் ஹிமாலயன் கார்ப் பந்தயப் போட்டி மும்பாய் பிராபோர்சன் ஸ்டேடியத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. உலகெங்கிலுமிருந்து 74 போட்டியாளர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

தொகுப்பு- சந்துரு

# வடமராட்சி கிழக்கு, இயக்கச்சி பிரதேசங்களுக்கு மிக விரைவில் மின்சாரம் வழங்க நடவடிக்கை

இயக்கச்சி—

வடமராட்சி கிழக்கு, இயக்கச்சி பிரதேசங்களுக்கு வெகுவிரைவில் மின்சாரம் வழங்கப்படவுள்ளது. இதன் ஆரம்பகட்ட நடவடிக்கையாக பளை - இயக்கச்சி ஏ9 வீதியிலும், புதுக்காடு - மருதங்கேணி வீதியிலும் வீதியோரங்கள் துப்புரவு செய்யப்பட்டு, மின்கம்பங்கள் நாட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

பளை - இயக்கச்சி 9.7 கிலோ மீற்றர் தூரத்துக்கு 7.475 மில்லியன் ரூபாவும், புதுக்காடு - மருதங்கேணி 5.6 கிலோ மீற்றர் தூரத்துக்கு 4.821 மில்லியன் ரூபாவும் மின்சாரம் வழங்குவதற்கென ஒதுக்கப்பட்டுள்ளது. (21)

நமது ஈழநாடு

**வைர வரிகள்**

தன்னை முழுமையாகத் திருத்திக் கொள்பவன், தன்னை அடுத்துள்ள அனைவரையும் திருத்துபவனாகிறான்.

- நார்மன் டக்ளஸ் -

## நமது நோக்கு

# 'மஹிந்த'வின் தேர்தல் விஞ்ஞாபனமும்; தென்பகுதி அரசியல் குழப்பங்களும்

கடைசியில் அனைத்துத் தரப்பினரும் எதிர்பார்த்தது போல ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடும் பிரதமர் மஹிந்த ராஜபக்ச, ஜனாதிபதி சந்திரிகாவின் கண்டனங்கள், நிராகரிப்புக்கள், கோபங்கள் மற்றும் உதாசீனங்கள் அனைத்தையும் ஒரு புறத்தே தள்ளிவிட்டு, சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் கொள்கைகள் இவைதான் என ஜனாதிபதியால் அடித்துக் கூறப்பட்ட அனைத்தையும் 'அம்போ' எனக் கைவிட்டுவிட்டு, ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமய போன்ற இனவாதக் கட்சிகளின் தமிழின விரோத, சமாதான விரோத சிந்தனைகளுக்கமைய தனது தேர்தல் விஞ்ஞாபனத்தைத் தயாரித்துவிட்டார் என்ற செய்தி வெளியாகியுள்ள சூழலில், இச்செய்கையால் அவர் தனது தாய்க் கட்சியின் முதுகில் குத்தியுள்ளதுடன், ஜனாதிபதியையும் அவமானப்படுத்தி, அவரது தலைமைத்துவத்தையும் நிராகரித்துள்ளார் என்ற கருத்து தென்னிலங்கையில் பரவலாகப் பேசப்படும் விடயமாகிவிட்டது.

தான் அரசியலுள் நுழைந்த காலம் முதற்கொண்டு, இனப் பிரச்சினைக்கு சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு காண்பேன் என்று தொடர்ச்சியாக இன்றுவரையும் 'வாய்ச் சவடால்' அடித்துவரும் ஜனாதிபதி, அதற்கு எதிரான செயற்பாடுகளிலேயே, அதாவது போரைத் தீவிரப்படுத்துவதிலேயே, தீச்சுவாலை நடவடிக்கை வரையும் முனைப்புடன் செயற்பட்டமை தெரிந்த விடயமே.

போர்த் தோல்வி - அரசியல் பின்னடைவு - போன்றவற்றை அடுத்தடுத்து சந்தித்த பின்னரும் - ஏன் ஆட்சிமாறி, புரிந்துணர்வு மற்றும் போர் நிறுத்த உடன்பாடு ஏற்பட்ட பின்னரும் கூட, அவர் சமாதான எதிர்ப்பாளராகவே செயற்பட்டவண்ணம் சமாதானம் என்ற சொல்லை உச்சரித்துக் கொண்டிருந்தமையும் நாடறிந்த விடயமேயாகும்.

பின்னர் ஐக்கிய தேசிய முன்னணியின் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஆட்சியைத் தனது நிறைவேற்று அதிகார வலுவைப் பயன்படுத்திக் கலைத்த வேளையிலும், சமாதான எதிர்பார்ப்பாளர்களான ஜே.வி.பியினருடன் கூட்டணி உடன்பாட்டை ஏற்படுத்தி, அவர்களின் ஆலோசனை மற்றும் நிர்ப்பந்தத்துக்கு அமையவே கலைத்தார் என்பதும் உண்மையேயாகும். அங்கே அப்போது அவரது அரசியல் சுயநல அபிலாஷைகளுடன் கூடிய உள்நோக்குத் திட்டங்களே அவரை அவ்வாறு நெறிப்படுத்தின என்றால் மிகையில்லை.

எனவே, ஜனாதிபதி சந்திரிகா அவர்கள் தமது செயற்பாடுகளின் மூலமே சந்தர்ப்பவாத அரசியலை எப்படி முன்னெடுப்பது என்ற அரசியல் அரிச்சுவடியை மஹிந்த ராஜபக்ஷ அவர்களுக்கும் போதித்தவராகிறார்.

சமாதான எதிர்ப்பாளரை - தமிழின எதிர்ப்பாளரை அரவணைத்துக் கொண்டே, சமாதானம் குறித்தும், தமிழ் மக்களுக்கு அதிகாரப்பரவல் மூலம் உரிமைகளை வழங்குவது குறித்தும் பேசியபடி, யுத்தத்துக்கான தயார்படுத்தலில் தீவிரமாக - அதேசமயம் மறைமுகமாக, ஈடுபடுதல் என்ற பேரினவாத சித்தாந்தத்தையே சகல தலைமைகளும் இதுவரை காலமும் கைக்கொண்டு தமிழினத்தை ஏமாளிகளாக்கி காலங்கடத்தி வந்துள்ளதையே வரலாறு அழுத்தமாகப் பதிவுசெய்துமுள்ளது.

இப்போது ராஜபக்சவும் அதையே செய்துள்ளார். எனினும், பதினொரு ஆண்டு காலம் யுத்த தேவதையாக போர்ச் சன்னதம் கொண்டு, சமாதான எதிர்ப்பு நகர்வுகளை மேற்கொண்ட ஜனாதிபதி சந்திரிகா, பதவி விலகும் அவசியம் ஏற்பட்டுள்ள இந்த வேளையில், மீண்டும் தன்னை ஒரு அமைதித் தேவதையாகப் பாவனை செய்யும் முயற்சியிலும், மஹிந்த மீதான தனிப்பட்ட காழ்ப்புணர்வின் அடிப்படையிலும் ராஜபக்சவை ஒரு இனவாதிவாக, தனது கட்சியின் கொள்கைகளை எதிர்ப்போரின் கைப்பொம்மையாகக் காட்ட முயல்கிறார் என்றே கூறவேண்டியுள்ளது.

மஹிந்த ராஜபக்ச அல்லாது, மீண்டும் சந்திரிகா அவர்களே ஜனாதிபதியாக வந்தாலும்கூட, அவரும் இதே கொள்கைகளைத்தான் நடைமுறைப்படுத்துவார் என்பதை தமிழ் மக்கள் நன்கறிந்துள்ளதால், அவர்களுக்கு மஹிந்த ராஜபக்சவின் தேர்தல் விஞ்ஞாபனம் எத்தகைய ஆச்சரியத்தையும் ஏற்படுத்தப்போவது கிடையாது.

ஆனால், தென்பகுதி அரசியலில் மஹிந்த ராஜபக்ச அவர்களின் தேர்தல் விஞ்ஞாபனம் தற்போது அது குறித்து வெளியான தகவல்களின் அடிப்படையிலேயே மாற்றமின்றி வெளியாகுமெனில், அது ஜனாதிபதியின் தற்போதைய அரசியல் கருத்து நிலைப்பாட்டுக்கு நேர் எதிரானதொன்றாகவே அமையும் என்பதில் ஐயமில்லை.

அப்படியானதொரு சூழ்நிலையில், ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் அவர்கள், பிரதமர் மீது என்ன நடவடிக்கையை எடுக்கப்போகிறார் என்ற கேள்விக்கு விடையை அவரே கூறியாக வேண்டும். இதில் ஜனாதிபதி தனது காலங்கடத்தி, இழுத்தடித்து, தாமதிக்கும் உத்தியைப் பயன்படுத்துவாரேயானால், அது அவரை அம்பலப்படுத்தி, அவரது பேரினவாத சுயத்தை வெட்டவெளிச்சமாக்கிவிடும்.

அவர் மஹிந்தவைக் கட்சியை விட்டு வெளியேற்றுவாரேயானால், கட்சி பிளவுபடுவது தவிர்க்க முடியாததாகிவிடும். மஹிந்தவுக்கான சுதந்திரக்கட்சியின் ஆதரவை விலக்குவதாக அறிவிப்பாரேயானால், அது ரணிலுக்கு சாதகமாகிவிடும்.

எதுவானாலும், இந்த ஜனாதிபதித் தேர்தல் தென்பகுதி அரசியலின் உள்ளக முரண்பாடுகளை வெளிச்சத்துக்கு கொண்டுவந்து கொண்டிருப்பதைப் போன்று, தேர்தல் முடிவுகளும் 'சில' அரசியல் மாற்றங்களைத் தென்பகுதியில் ஏற்படுத்தவே செய்யும். இந்த மாற்றமானது வடக்கு - கிழக்கு மக்கள் தமது எதிர்காலம் குறித்த திட்டவட்டமான - இறுதி முடிவைத் தேர்வு செய்வதற்கான சூழலையும் உருவாக்கியே தீரும்.

267, Navalar Road,
Jaffna.
T.P. - 021-2225107
www.eezhanaadu.com

## நாடும் நடப்பும்




எச்சரிக்கை...

மஹிந்தவின் தேர்தல் விஞ்ஞாபனம் இன்று வெளிவருகிறது...

## 'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# வாய்மொழியாக பரவிய வதந்திகள் இன்று பத்திரிகைகளாலும் பரவுகின்றன

முன்பெல்லாம் வதந்திகள் வாய்மொழி மூலமாகப் பரப்பப்பட்டுவந்தன. 1958ஆம் ஆண்டில் இனக் கலவரம் தொடங்கிய நாட்களில் முதல்நாள், எங்கள் வீட்டுக்கு மீன் கொண்டுவந்து கொடுக்கும் ஒரு மனுஷி அன்றும் மீன் கொண்டுவந்தார். ஒரு மீனை வெட்டித் துண்டு துண்டாக்கியபோது, இப்படித்தான் பச்சைக் குழந்தைகளைத் துண்டாக வெட்டி மீன்பெட்டிகளுக்குள் போட்டு அடைத்து யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு அனுப்பியிருக்கிறார்கள் என்று சொன்னாள். அப்பொழுது நாங்கள் கல்கிசை கடற்கரைக்குச் சமீபத்திலிருந்தோம். பின்னர் இதேபோல பல இடங்களிலும் மீன்காரிகளே இந்த வதந்தியைப் பரப்பியிருந்ததை அறிந்து கொண்டோம். நாங்கள் அந்த வதந்திகளின் ரிஷி மூலம் நதி மூலத்தை அறிந்து யாருக்கு என்ன பயன்? இப்பொழுது பத்திரிகைகளே இந்த வதந்தியைப் பரப்புவதில் தயக்கமில்லாமல் முன்னிலை வகிக்கின்றன. அன்றும் பத்திரிகைகள் இப்பணிக்குக் காரணமாக இருந்திருக்கின்றன என்று சொல்லலாம் என்று நண்பர் பரமசிவம் எனக்குச் சொல்லிக் கொண்டிருந்தார்.

இது தேர்தல் காலம் - வதந்திகள் பரவுவது வழமைதான். வாக்குகளைத் தங்கள் வேட்பாளர்களுக்குச் சாதமாகத் திருப்புவதற்கு என்னவெல்லாம் சொல்லமுடியுமோ? அவற்றிற்குமதிகமாகவே சொல்லுவார்கள் என்று சொன்னேன். நீர் சொல்லவந்தது எதைப் பற்றி என்றும் கேட்டேன்.

தினமும் கொழும்பிலிருந்து வெளிவரும் இரண்டு ஆங்கிலத் தினசரிகள் எந்தச் செய்தியையும் விடுதலைப் புலிகளுக்கு எதிராகவே சரிக்கட்டி எழுதி மக்களைக் குழப்பி விடுவதில் பெயர் பெற்றவை. இப்பொழுது தேர்தல் காலத்தில் ஜே.வி.பிக்குச் சார்பாக இருக்கும் லங்கா என்ற பத்திரிகை, கருணாவுக்குத் தன்னையே ஒப்புவித்திருக்கிறது. குட்டையைக் குழப்பிவிட்டு தமிழ் மக்கள் மத்தியில் மோதல் ஏற்படுமா என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. இதேபோல் "சத்தின" என்ற சிங்களப் பத்திரிகையும் தன்பங்குக்குக் குட்டையைக் குழப்பித் தனது பத்திரிகை விற்பனையை அதிகரிப்பதில் குறியாக இருக்கிறது. மஹிந்தவின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் புலிப் பயங்கரவாதி ஒருவர் தற்கொலைக் குண்டுத் தாக்குதலை மேற்கொள்வதற்கு முயற்சி என்றொரு செய்தியை தலைப்புச் செய்தியாக சமீபத்தில் வெளியிட்டிருந்தது. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் செயற்பாடுகளுக்காக இணைந்துள்ளவர்களுள் எல்.ரி.ரி.ஈ அமைப்புடன் நெருங்கிய தொடர்புடைய நபரொருவர் உள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளதாம். இந்த நபர் தினமும் அலரிமாளிகைக்குச் சென்று வருவதாகவும் அவருடன் நெருங்கிச் செயற்பட்டுவருவதாகவும் தெரியவருகிறது.

இந்தத் தகவல்களுக்கு எல்.ரி.ரி.ஈயினருடன் நெருங்கிய தொடர்புகளை வைத்திருக்கும் இந்நபர் மஹிந்த ராஜபக்ஷவை கொலை செய்யும் நோக்கில் செயற்படும் நபரா என்ற சந்தேகமும் தற்பொழுது எழுந்துள்ளது என்று அந்தச் செய்தி தெரிவிக்கிறது என்று ஒரு தமிழ்ப் பத்திரிகைச் செய்தி தெரிவித்தது என்று பரமசிவம் சொன்னார்.

இந்தச் செய்தியை வைத்து அரச புலனாய்வுப் பிரிவினர் இன்னும் கொஞ்சம் கற்பனையும் சேர்த்து, மற்றைய அரசியல் கட்சிகள் இதற்குச் சான்றாக வெளியிடும் தகவல்களையும் சேர்த்துஅறிக்கை தயாரித்து வெளியிடுவார்கள் என்று நான் சொன்னேன். இன்னமும் அவர் அலரி மாளிகைக்குப் போய்க்கொண்டுதானிருக்கிறாரா? என்றும் கேட்டேன்.

அதுசரி யாழ்ப்பாணத்தில் சில மணிநேரங்களுக்கிடையில் இரண்டு பிரபல கல்லூரி அதிபர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்தக் கொலைகள் பற்றி அரசசார்பான தமிழ் அரசியல் கட்சியொன்று அறிக்கை வெளியிட்டபோது, இந்த இரு கொலைகளையும் விடுதலைப்புலிகளே செய்தார்கள் என்று அறிவித்தது. இதைப்பின்பற்றியே இந்தக் கொலைகள் பற்றி அரச புலனாய்வுப் பிரிவினர் அறிக்கை வெளியிட்டு விடுதலைப்புலிகளே காரணமென்று தெரிவித்தனர். இப்போது எப்படி வதந்தி கிளப்பப்பட்டு அரச புலனாய்வுத்துறை மூலம் ஆதாரபூர்வமான செய்தியாக்கப்படுகிறதென்பது தெரிகிறதா என்று கேட்டேன்.

இந்த வதந்திகள் பின்னர் புலனாய்வு அறிக்கைகளாகிக் கொலைப்பழி ஆதாரபூர்வமாகச் சுமத்தப்பட்டுவிடும். தேர்தல் பிரசார இறுதிக் கூட்டத்தில் எங்காவது வெடிக்கும் குண்டு வேட்பாளர்கள் எவருக்காவது ஏதாவது ஏற்படுத்தினால் புலிகள் மீதே பழி போய்ச்சேரும் என்பதற்கு இப்பொழுது நடைபெறும் சம்பவங்களே சான்றாக இருந்துவிடப்போகிறது என்று பரமசிவம் சொன்னார்.

இறுதி நேரத்தில் வேட்பாளர்கள் கண்டபடி மக்கள் மத்தியில் பிரசாரத்துக்காகத் திரிவதை நிறுத்துவதும், வேட்பாளர்களுக்கு மாலைபோட்டு வரவேற்பதைத் தடுப்பதும், பட்டாசு கொளுத்துவதைத் தவிர்ப்பதுவும் முன்னெச்சரிக்கையான நடவடிக்கைகளாகும். மாலைபோடுவதையும், பட்டாசு வெடிப்பதையும் வரவேற்பு ஏற்பாட்டாளர்களும், பொலிஸாரும் சுலபமாகத் தடுக்கலாம். புலிகள் மீது பழியைச் சுமத்தித் தேர்தலில் வெற்றிபெறுவதற்கும் இப்படியான சந்தர்ப்பத்தைச் சில அரசியல்வாதிகள் தாமாகவே தயார்செய்யவும் கூடும் என்று நான் சொன்னேன்.

இதைப் புலனாய்வுத்துறையினரும் எதிர்பார்த்துக் காத்திருப்பர் என்று சொன்னபடி நடந்தார் பரமசிவம்.

## வாசகர் நோக்கு

# எதிர்காலம்?

பெண்கள் அன்று அகப்பைதான் பிடித்தார்கள், இன்று ரீவியைத்தான் பிடிக்கின்றார்கள். சின்னத்திரை, சினிமாப்படங்கள், கலை நிகழ்வுகள் என தொலைக்காட்சியையே தஞ்சமென நம்பியிருக்கின்றனர். இதனால் அவர்களின் பிள்ளைகளும் கெட்டு - எதிர்காலச் சந்ததியின் நல்வாழ்வும் கேள்விக்குறியாகிவிடும். கணவன் களைப்பில் வேலையிலிருந்து வந்து ஒரு தேநீர் கொண்டு வாரும் என்றால், பொறுங்கோ நாடகம் முடியப்போகுது முடியட்டும் வாறன் என்பார்கள். சிறுவர்களை ஏன் படிக்கப் போகவில்லை என்றால், இன்று இலங்கைக்கும், இந்தியாவுக்கும் மச். அத்துடன் ஆசிரியரும் வரமாட்டார் என்பார்கள். இப்படியே போனால் எமது சமுதாயத்தை அதிலிருந்து மீட்டெடுப்பது கஷ்டமாகிவிடும். தொலைக்காட்சி பார்க்கத்தான் வேண்டும். ஆனால், அதுதான் தஞ்சமென இருக்கக்கூடாது. இன்றைய காலகட்டத்தில் குடும்பப் பிரச்சினைகளுக்கும், விவகாரத்திற்கும் தொலைக்காட்சியும் காரணமாக இருக்கிறது. ஆகவே, குடும்பப் பெண்களாக இருந்தாலும் சரி, சிறுவர்களாக இருந்தாலும் சரி குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கி பார்ப்பது நன்று.

அதிக ஓய்வு என்றால் ஏதாவது (கைத்தொழில்) வருமானம் தரும் விடயங்களை அணுகலாம். ஆகவே எமது தமிழ்ச் சமுதாயத்தின் பண்பாடு, கலாசாரம் என்பவற்றை சினிமாவால் அழித்து விடாதீர்கள். எமது இளம் சமுதாயத்தை ஒற்றுமையாக, திறமையாக நல்லொழுக்கம் உடையவர்களாக வளர்த்தெடுக்கும் பாரிய பொறுப்பு உங்களுடையதே.

கல்வியில் நாட்டமுடையவர்களாகவும், தமிழ் மண்ணில் பற்றுடையவர்களாகவும், புரிந்துணர்வு உடையவர்களாகவும் அவர்கள் வளரவேண்டும்.

வடமராட்சி கிழக்கு. ஆர்.என்.கோபால்.

# தமிழ் மக்கள் தம் உரிமைக் குரலை தலைநகர் திருமலையில் ஓங்கி ஒலிக்க வேண்டிய தருணம்





தமிழ்ர் தேசத்தின் தலைநகர் திருமலை அழைக்கிறது.

தீந்தமிழரே திரண்டு வாரும் கோணமலையைச் சூழ்ந்துள்ள கொடுமைகளைக் களைந்தெறிய கொதித்தெழுவீர்.

**வட்டுக்கோட்டை காட்டிய வழியில்.**

ஈழம் தான் முடிந்த முடிவென, வட்டுக்கோட்டையில் விட்டுக்கொடுக்காது, எடுத்த தீர்மானத்தை 29 ஆண்டுகள் கழிந்த நிலையில் மீண்டும் நினைவு படுத்தும் முறையில் வடக்கின் எல்லையாம் வயல் செறிந்த வவுனியாவில், வாழ்வளிக்கும் வவுனியாவில் தமிழீழக் குரலை மீண்டும் எழுப்பினோம். வவுனியாவை அடுத்து மீன்பாடும் தேன் நாட்டில் முத்தமிழ் வித்தகர் விபுலானந்தர் பிறந்த மண்ணில், கவிஞர் காசி ஆனந்தனைப் பெற்றெடுத்து பெருமை கொள்ளும் மட்டக்களப்பு மண்ணில், எதையும் தாங்கும் இதயத்தோடு மட்டக்களப்பில் எல்லோர் மனம் கவரும்முறையில் தமிழீழ எழுச்சி மாநாடு நடை பெற்றது.

அடுத்து வன்னியில் எம் எழுச்சிப் பேரவையைக் கூட்டி வையத்தை நோக்கி குரலெழுப்பினோம். வன்னியில் வையத்தை நோக்கி குரலெழுப்பிய நாம் எம் இனத்தின் தொல்லை தீர முல்லையில் முழங்கினோம்.

**வன்னியும் முல்லையும் வழிகூற**

முல்லையிலிருந்து புறப்பட்ட நாம் மாதோட்ட நன்நகரை நாடி நாம் நடத்திய மாநாடு எம் எதிர்பார்ப்பைவிட மாபெரும் வெற்றியை எமக்கு ஈட்டித்தந்தது.

முத்து விளையும் மன்னாரிலிருந்து புறப்பட்ட நாம் தமிழீழத்தின் பண்பாட்டுத் தலைநகராம் யாழ்ப்பாணத்தில் செம்ரெம்பர் 30 இல் தமிழர் ஆகிய நாம் எமக்குள் எம் அழிவையொட்டி அழுது பயனில்லை. சிங்களவர் சிந்தனையில் மாற்றம் கொண்டு வருவதற்கும் வாய்ப்பில்லை. எனவே உலகை நோக்கி குரலெழுப்புங்கள் - உலகின் கருத்தை எம்பால் ஈர்த்திடுங்கள் என்ற தமிழ் தலைமையின் கட்டளையை நிறைவேற்றினோம்.

**திருமலைத் தீர்மானம் திருப்புமுனையாக அமைய**

மேற்குறித்த மாநாடுகள் எல்லாம் எமது சிந்தனைக்கு நிறைவு தரும் முறையில் அமைந்திருந்த போதும், தோன்றவிருக்கும் தமிழர் தாயகத்தின் தலைநகராக விளங்கப் போகின்ற திருகோணமலையில் நாம் ஓங்கி ஒலித்தால் தான், உலகம் நம் குரலுக்கு முழுமையாக செவிசாய்க்கும் என்ற நம்பிக் கையில் எதிர்வரும் 22.10.2005 இல் வரலாற்றை மாற்றி அமைக்கின்றவொரு திருப்புமுனையை ஏற்படுத்துகின்ற மாநாட்டைக் கூட்ட இருக்கிறோம். இந்த மாநாட்டில் கட்சி கடந்த நிலையில், மதம் கடந்த நிலையில், மாகாணம் கடந்த நிலையில் அனைத்து தமிழ் மக்களும் ஒன்று கூடுவது உறுதி.

திருமலை வெறும் சாதாரண மண்ணல்ல - 'குரைகடல் ஓரம் நித்திலம் கொழிக்கும் கோணமாமலையில்' குடிகொண்டுள்ளவன் கோணேசன். அந்தக் கோணசனை நினைவு கொள்கின்ற போது 'கோணமலை காணாத கண் என்ன கண்ணே கும்பிட்டு நில்லாத கைஎன்ன கையோ' என்று பைந்தமிழில் எழுந்த பக்தி மூழ்கிய குரல் எமக்கு நினைவுக்கு வருகிறது. கோணேசன் கோயிலை எண்ணிப்பார்க்கின்ற போது, 7 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த - தன்னை தமிழ் ஞானசம்பந்தன் என 50 இடங்களிலும், தமிழின் பெருமையை 500 இடங்களிலும் பாடிய ஞானசம்பந்தனின் பின்வரும் சொற்தொடர் நினைவுக்கு வருகிறது.

கோணமாமலை எழுந்துள்ள கோணேசனை 'தம் தாயினும் நல்ல தலைவன் எம் வாயினும் மனத்தும் மருவிநின்று அகலாத மாண்பினன்' என்று மெய்மறந்துபாடும் இவர், திருமலையில் 7 ஆம் நூற்றாண்டில் வேற்றினத்தவர்க்கு இடம் கொடாது, தமிழன் நெருங்கி வாழ்ந்த வரலாற்றினை 'குடிதனை நெருக்கி பெருக்கமாய் வாழ்ந்த கோணமாமலை' என நெஞ்சு நிமிர்ந்து பாடுகிறார். இன்றோ தமிழன் அந்த மண்ணிலிருந்து நெருக்கப்பட்டு வெளியேற்றப்படுகிறான்.

ஆயிரங்கால் மண்டப முடையது கோணேசர் கோயில் என்பது வரலாறு தருகின்ற வளமான செய்தி. இந்தக் கோணேசர் கோட்டைக்குள் புத்தர் சிலை எழுப்பப்பட்டுள்ளது. பௌத்த கோயில் கட்டடப்பட்டுள்ளது. பாவத்தை நாசமாக்க தமிழன் கட்டிய பாவநாசக்கேணியை இன்று சிங்களவர்கள் தம் பாவத்தை கட்டியணைக்கும் கேணியாக மாற்றியுள்ளார்கள். அத்தோடு குப்பை கூழங்கள் நிறைந்த கேணியாகக் காட்சியளிக்கிறது. தமிழன் கட்டிய இந்தக் கோயிலை தமிழன் சென்று வழிபட இன்னும் தடைகள் பல தொடர்கின்றன. ஒரு காலத்தில் இசைவுச்சீட்டு பெற்றுச் செல்லும் நிலையிலிருந்தது. இந்தக் கோயிலில் வாசல் வரை தரைப் படையும், கடற்படையும் செல்லும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் தமிழனுக்கு வாசல் வரை செல்லத் தடை விதிக்கப் பட்டுள்ளது.

**குளக்கோட்டன் கட்டிய கந்தளாயைக் காப்பாற்றுவோம்.**

இவை அனைத்தையும் மிஞ்சுகின்ற முறையில் அண்மையில் திருமலையில் மூலை முடுக்குகள் எங்கும், அரசமரம் இருக்பினும், இல்லாதவிடத்திலும் புத்தர் சிலைகள் நிறுவப்பட்டுள்ளன. திருமலை பேருந்து நிலையத்தில் பெரியதொரு புத்தர் சிலை நிறுவப்பட்டுள்ளது. சிங்களவர்களை மிஞ்சுகின்ற நிலையில், புத்தரின் பெருமைகளை உணர்ந்தவர்கள் நாம். சீத்தலைச் சாத்தனார் சாற்றிய 'மணிமேகலை' இதற்குச் சான்று கூறும். கவிமணி அவர்கள் எழுதிய 'ஆசியஜோதி' எம் கூற்றுக்கு அரணாக அமைகிறது. தமிழ் நாட்டுஅரசின் பரிசைப் பெற்ற வெங்கடசாமி நாட்டார் எழுதிய 'புத்தமும் தமிழும்' என்ற நூல் புத்தர் புகழ் பாடுகின்றது. 'புவிக்கு புது வழிகாட்டிய புத்தர்' என அரசு வெளியிட்ட சிறீலங்கா இதழில் 1956 ஆம் ஆண்டில் நாம் புத்தரைப்பற்றி வரைந்த கட்டுரை புத்தர் எமது உள்ளத்தில் எவ்வளவு தூரம் குடிகொண்டுள்ளார் என்பதற்குச் சான்று கூறும். ஆனால் இந்த மாசுமறுவற்ற புத்தரின் சிலை திருமலை பேருந்து நிலையத்தில், மலசலகூடத்துக்கும், இறைச்சிக்கடைக்கும் அருகில் மாசு படிந்த சூழலில் நிறுவப்பட்டுள்ளது.

வெறிக்கு விளக்கமில்லை, வெறியாட்டம் தொடர்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டாக - கந்தளாய் குளத்திலும், பௌத்த சிங்கள வல்லாண்மை கண் வைத்துள்ளது. கந்தளாய்க் குளத்தைக் கட்டியவன் குளக்கோட்டன் என்பதை நாடும் அறியும் நானிலமும் அறியும். 18 ஆம் நூற்றாண்டில் திருமலையில் ஆட்சி செய்த ஆளுநராகிய பென்சன்டன் (Benson Dan) எனும் ஒல்லாந்தர், தனது நாட்டுக்குறிப்பில் 'கந்தளாய்க் குளத்தைக் கட்டியவன் குளக் கோட்டன்' என்று தெட்டத் தெளிவாக எழுதியுள்ளார். ஆனால் வரலாற்றை திரித்துக் கூறுவதில் கைதேர்ந்த சிங்கள வரலாற்று ஆசிரியர்கள் கந்தளாயை கட்டியவர் அனுராதபுரத்தை 7 ஆம் நூற்றாண்டில் ஆண்ட 2 ஆம் அக்ரபோதி மன்னன் என்று வரைந்துள்ளனர். இதை அடிப்படையாக வைத்து 9 ஆம் வகுப்புக்குரிய தமிழ் வரலாற்று நூலிலும் இதே குறிப்பு காணப்படுகிறது. இதன் விளைவு வரலாறு பயில்கின்ற மாணவ, மாணவிகள் பிழையாக வழி நடத்தப்படுகின்றனர். பொய் மெய்யாக்கப்படுகின்றது.

அண்மையில் கந்தளாய் குளத்துக்கு முன்பாக அக்ரபோதி மன்னனின் சிலை எழுப்பப்பட்டு திரை நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக நாமறிகிறோம். அத்துடன் கந்தளாக் குளத்துக்கு அருகில் 'அக்ரபோதி மன்னன்' பெயரில் சிங்களப் பாடசாலை ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது.

**திருமலை இந்துமா சமுத்திரத்தின் திறவுகோல்**

திருகோணமலையில் தான் உலகின் தலைசிறந்த துறை முகம் உண்டு. இந்த உண்மையை நினைவு கொண்டுதான் 19 ஆம் நூற்றாண்டில் பிரித்தானிய பேரரசின் தலைமை அமைச்சராக விளங்கிய வெலிங்டன் பிரபு (Lord Wellington) பின்வருமாறு திருமலை துறைமுகத்தின் முக்கியத்துவத்தைக் கூறுகின்றார். 'Man who holds Trincomalee holds the key to the Indian ocean' (எவன் திருகோணமலையை வைத்திக்கிறானோ அவன் இந்துமா சமுத்திரத்தின் திறவுகோலை வைத்திருக்கிறான்). திருகோணமலையின் சிறப்பினை உணர்ந்துள்ள எம் சிந்தனைச் சிற்பி கதிரவேற்பிள்ளை மேலும் ஒரு படி சென்று 'Lose Colombo and gain Trinco' (கொழும்பை இழ திருகோணமலையைப் பெறு) என்று கூறினார். இந்தப் பொருள்பொதிந்த கூற்றினை எம்முள் எத்தனை பேர் நாம் அடுத்தடுத்துக் கூறி வந்த முக்கியத்துவம் நீங்கலாக வடக்கு - கிழக்கை இணைக்கின்ற இணைப்புப் பாலமாக, கேந்திரஸ்தானமாக விளங்குவது திருகோணமலை. திருகோணமலையை நாம் எந் நிலையிலும் இழப்போமாயின் யாழ்ப்பாணத்துக்கும், மட்டக்களப்புக்கும் உள்ள தொடர்பு துண்டிக்கப்படும்.

**குடித்தொகைக் கணக்கு குத்திக் காட்டும் உண்மை.**

1898 ஆம் ஆண்டில் திருமலையின் துணை அரச முகவராக விளங்கிய சி.எம்.லுசின்டன் இலங்கையில் எந்தப் பகுதியிலும் சிங்கள வரைக் காணாது இருக்க முடியாது. ஆனால் திரு மலையில் மட்டும் தான் சிங்களர் எவரையும் காணாது நாம் வாழ முடியும். 1898 ஆம் ஆண்டில் கூறப்பட்ட கூற்று இது. ஆனால் ஒவ்வொரு பத்தாண்டும் நடைபெறுகின்ற குடித்தொகை மதிப்பீடு நம்மை படு குழியில் அல்லவா வீழ்ச்சியுள்ளது. இன்று தமிழருடைய எண்ணிக்கையா, சிங்களவர்களுடைய எண்ணிக்கையா கூடியது என்று எண்ணுகின்ற அளவுக்கு எமக்கு ஏக்க நிலை உருவாகியுள்ளது. இஸ்லாமிய உடன்பிறப்புகளின் எண்ணிக்கையோடு எம் எண்ணிக்கையையும் சேர்க்கும் போது தான், நாம் தப்பிப் பிழைக்க வாய்ப்புண்டு. இன்று விகிதாசார அடிப்படையில் மக்கள் தொகை பின்வரும் முறையில் அமைகிறது. தமிழர் -56%, சிங்களவர்-31%, இஸ்லாமியர்-33%. அண்மையில் நடந்த தேர்தலில் சம்பந்தர் பெற்ற வாக்குகள் - 47735, துரைரெத்தின சிங்கம் பெற்றது - 34773, அப்துல் மஜீட் பெற்றது - 26948 , ஜெயந்த விஜயசேகர பெற்றது - 19983 வாக்குகள்.

திருமலையைத் திட்டமிட்டுப் பறிக்கும் முயற்சி டி.எஸ். சேனநாயக்காவின் காலத்திலேயே உருவாகியது என்பதற்க சான்றுகள் பலவுண்டு. தமிழனின் நிலத்தைப் பறிக்கும் கோட்பாட்டில் டி.எஸ்.இற்க்கும், டட்லிக்கும் அவ்வளவு வேறுபாடு இருக்கவில்லை. ஆதியில் தமிழ் மரபில் தோன்றிய சி.பி.டி. சில்வாவுக்கு சிங்கள குடியேற்றத்தை வெற்றிகரமாக நடத்தியதில் பெரும் பங்குண்டு என்பதை குறிப்பிட வேண்டியது அவசியமாகும்.

**திருமலையைத் திட்டமிட் டுப் பறிக்கும் முயற்சி டி.எஸ். சேன நாயக்காவின் காலத்திலேயே உருவாகியது என்பதற்க சான்றுகள் பலவுண்டு. தமிழனின் நிலத்தைப் பறிக்கும் கோட்பாட்டில் டி.எஸ்.இற்க்கும், டட்லிக்கும் அவ்வளவு வேறுபாடு இருக்கவில்லை. ஆதியில் தமிழ் மரபில் தோன்றிய சி.பி.டி. சில்வாவுக்கு சிங்கள குடியேற்றத்தை வெற்றிகரமாக நடத்தியதில் பெரும் பங்குண்டு என்பதை குறிப்பிட வேண்டியது அவசியமாகும்.**

மலையகத் தமிழ் மக்கள் இனப்படுகொலை காரணமாக - வெளியேற்றப்பட்டு திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா போன்ற பகுதிகளில் குடியேற்ற முயன்ற போது தடுக்கும் வெறியாட்டத்தில் காமினி திஸநாயக்காவின் நடவடிக்கை முக்கியமானது. அத்தோடு தொண்டமான் அகதிகளாக்கப்பட்ட இந்த மக்களுக்காக குரலெழுப்பி காமினி திஸநாயக்காவோடு மோதிய வரலாறும் உண்டு. ஐக்கிய தேசியக் கட்சியின் தேவநாயகம் கூட கல்குடாவில் சிங்களவர்களைக் குடியேற்ற காமினி முயன்ற போது, கொதித்தெழுந்ததையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்த வரலாற்றுச் சூழலில் தான் எதிர்வரும்22.10.2005 இல் திருமலையில் எழுச்சி மாநாட்டை நடத்தப்போகின்றோம். இதன் வரலாற்று முக்கியத்துவத்தை உணர்ந்து தமிழ் மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு தமது குரலை ஓங்கி ஒலிக்க வைக்க வேண்டியதும் ஒரு வரலாற்றுக் கடமையாகும்.

**மா.க.ஈழவேந்தன்**

# ஈராக்கில் இடம்பெற்ற விமானத் தாக்குதலில் 70 கிளர்ச்சிவாதிகள் பலியானதாகத் தகவல்!

பாக்தாத்—

ஈராக்கின் மேற்குப் பகுதி நகரான றமாடிக்கு அருகிலுள்ள இரண்டு கிராமங்கள் மீது நடத்தப்பட்ட விமானத் தாக்குதலில் சுமார் 70 கிளர்ச்சிவாதிகள் கொல்லப்பட்டதாக அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது.

ஆனால், அமெரிக்க விமானத் தாக்குலில் கொல்லப்பட்டவர்களில் பெருமளவானோர் சாதாரண பொதுமக்களென சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

கடந்த சனிக்கிழமை வாகனத்தில் சென்றுகெண்டிருந்த அமெரிக்கப் படையினரை இலக்குவைத்து நடத்தப்பட்ட வீதியோர குண்டுத் தாக்குதலில் ஐந்து படையினர் கொல்லப்பட்டனர்.

இதனையடுத்து அந்தப் பகுதியில் நடத்தப்பட்ட விமானத் தாக்குதலில் 20 கிளர்ச்சிவாதிகள் கொல்லப்பட்டதாக அமெரிக்க இராணுவம் தெரிவித்தது. இந்தப் பகுதியில் கிளர்ச்சிவாதிகள் மற்றொரு குண்டொன்றை புதைத்துக் கொண்டிருந்தவேளையே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் அமெரிக்க இராணுவம் தெரிவித்தது.

ஆனால், அமெரிக்க இராணுவத்தின் இந்தக் கூற்றை சம்பவத்தை நேரில் கண்டவர்கள் மறுத்துள்ளனர். தாக்குதலுக்குள்ளான அமெரிக்க இராணுவ வாகனத்தை சூழ்ந்து நின்ற பொதுமக்கள் மீதே விமானத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

மற்றைய தாக்குதல் அல்புபராஜ் என்ற கிராமம்மீது நடத்தப்பட்டது. தமது சோப்ரா ஹெலிகொப்டர் மீது கிளர்ச்சிவாதிகள் தாக்குதல் நடத்திய தாகவும், இதனையடுத்து அந்தப் பகுதியிலுள்ள கட்டடமொன்றில் மறைந்திருந்த 40 கிளர்ச்சிவாதிகள் மீது விமானத் தாக்குதல் நடத்தப்பட்டதில் அவர்கள் அனைவரும் கொல்லப்பட்டதாக அமெரிக்க இராணுவம் தெரிவித்தது.

ஆனால், இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்டவர்களில் 14 பேர்வரை பொதுமக்கள் என சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற புதிய அரசியலமைப்பு சீர்திருத்தத்துக்காக நடத்தப்பட்ட அபிப்பிராய வாக்கெடுப்பில் மிககுறைந்தளவானோரே வாக்களித்துள்ளதாக தகவல்கள் தெரிவித்தன. இதற்குப் பொதுமக்கள் இந்த வாக்கெடுப்பை எதிர்ப்பதனாலோ அல்லது கிளர்ச்சிவாதிகளின் தாக்குதல் அச்சம் காரணமாகவோ இருக்கலாமென செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

## ஈக்வடோர் முன்னாள் ஜனாதிபதி பொலிஸாரால் கைதானார்!

குவிட்டோ—

தென் அமெரிக்க நாடுகளில் ஒன்றான ஈக்வடோரில் கடந்த ஏப்ரல் மாதம் அரசுக்கு எதிராக மக்கள் புரட்சியில் ஈடுபட்டனர். இதைத் தொடர்ந்து அதிபர் லூசியோ கூட்டியரங் பதவி விலகினார். குடும்பத்துடன் அவர் கொலம்பியா நாட்டுக்கு தப்பிச் சென்றுவிட்டார்.

இதைத் தொடர்ந்து ஈக்வடோர் நாட்டில் புதிய ஆட்சி அமைக்கப்பட்டது. பதவி விலகி தப்பியோடிய அதிபர் மீது இராஜ துரோகம் மற்றும் ஊழல் வழக்குள் தொடரப்பட்டன.

இந்த நிலையில் முன்னாள் அதிபர் லூசியோ கொலம்பியாவில் இருந்து தனி விமானம் மூலம் சொந்த நாட்டுக்கு திரும்பினார். அவர் விமானத்தை விட்டு வெளியே வந்ததும் தயாராக நின்ற பொலிஸார் அவரை கைதுசெய்தனர். அவரை ஒரு ஹெலிகொப்டரில் ஏற்றிச்சென்று சிறையில் அடைத்தனர்.

முன்னதாக மாண்டா விமான நிலையத்தில் அவரது ஆதரவாளர்கள் ஏராள மானவர்கள் கூடிநின்று பொலிஸாருக்கு எதிராக கோஷம் போட்டனர். பொலிஸார் தடியடி நடத்தி அவர்களை விரட்டினர்.

# பலஸ்தீன கிளர்ச்சிவாதிகள் தாக்குதல்; மூன்று இஸ்ரேலியர்கள் உயிரிழந்தனர்!

டெல் அவிவ்—

பலஸ்தீன கிளர்ச்சிவாதிகள் நடத்திய தாக்குதலில் மூன்று இஸ்ரேலிய பொதுமக்கள் பலியானதையடுத்து மேற்குக்கரையூடாக பலஸ்தீனர்களின் பிரயாணப் பாதையை இஸ்ரேல் அரசாங்கம் தடைசெய்துள்ளது.

குஷ் எட்ஸன் குடியிருப்புப் பகுதியிலுள்ள பஸ் நிலையத்தில் நின்ற இரண்டு பெண்கள் மற்றும் 15 வயது சிறுவன் ஒருவனும் பலஸ்தீன கிளர்ச்சிவாதிகளின் துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்தனர். இதனையடுத்து மேற்குக் கரையிலுள்ள எலி குடியிருப்புப் பகுதியிலும் கிளர்ச்சிவாதிகளின் தாக்குதலில் இஸ்ரேலியர் ஒருவர் காயமடைந்தார்.

இந்தச் சம்பவங்களுக்கு அல் அக்ஷா மாட்டியர் பிரிகேட் எனும் இஸ்லாமிய அமைப்பு உரிமைகோரியுள்ளது.

இதனையடுத்து இஸ்ரேலிய படையினர் மேற்கொண்ட தாக்குதலில் ஜிகாத் அமைப்பின் முக்கிய உறுப்பினர் நிகாத் அபு ஹனிம் (வயது 27) கொல்லப்பட்டார்.

இந்தத் தாக்குதல்களைத் தடுப்பதற்கு பலஸ்தீன அதிகாரசபை தேவையான நடவடிக்கையை மேற்கொள்ளவில்லையென இஸ்ரேல் குற்றஞ் சாட்டியுள்ளது.

அத்துடன், முஸ்லிம்களின் புனித நோன்புப் பெருநாளான றம்ழானை முன்னிட்டு மேற்குக்கரை ஊடாக பலஸ்தீனர்கள் பயணஞ்செய்வதற்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடு சில வாரங்களுக்கு முன்னர் தளர்த்தப்பட்டதாகவும் - ஆனால், இந்தத் தாக்குதலுக்குப் பின் அந்தத் தளர்வு மீண்டும் கட்டுப்படுத்தப்படுவதாகவும் இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இவ்வாறான தாக்குதல்கள் எதிர்காலத்தில் நடைபெறாதிருப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்



டுள்ளதாக இஸ்ரேல் வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் மார்க் றெஜீவ் தெரிவித்தார். அத்துடன் பலஸ்தீன பாதுகாப்புத்துறையுடன் இஸ்ரேல் பாதுகாப்புத்துறை கொண்டிருந்த தொடர்புகளையும் தற்காலிகமாக இஸ்ரேல் துண்டித்துள்ளது.

இந்தவாரம் வொஷிங்ரன் சென்று அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ள பலஸ்தீன ஜனாதிபதி அப்பாஸிற்கு இந்தத் தாக்குதல்கள் மேலும் அழுத்தத்தை அதிகரிக்கக் கூடுமென பி.பி.ஸி. செய்தியாளர் மத்யூ பிறைஸ் தெரிவித்தார்.

## பாகிஸ்தானில் இடிபாடுகளிலிருந்து போலியோவால் பாதிக்கப்பட்ட சிறுமி உயிருடன் படையினரால் மீட்கப்பட்டார்!

இஸ்லாமாபாத்—


பாகிஸ்தானில் பூகம்ப இடிபாடுகளிலிருந்து போலியோ பாதித்த சிறுமி 8 நாட்களுக்குப் பிறகு உயிருடன் மீட்கப்பட்டார்.

பாகிஸ்தானில் கடந்த 8 ஆம் திகதி பயங்கரப் பூகம்பம் ஏற்பட்டது. முசாபராபாத்தை மையமாக வைத்து ஏற்பட்ட இந்தப் பூகம்பத்தால் 38 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பலியாகிவிட்டனர்.

பூகம்பப் பகுதிகளில் ஆயிரக் கணக்கான கிராமங்கள் அழிந்துவிட்டன. இடிபாடுகளிலிருந்து உடல்களை மீட்கும் பணி முடிவடைந்துவிட்டது. பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கும் பணி இப்போது நடைபெற்றுவருகிறது. பூகம்பப் பகுதிகளில் இன்னும் தொடர் மழை பெய்து வருகிறது. ஏராளமான பகுதிகள் நிலச்சரிவால் துண்டிக்கப்பட்டுவிட்டன.

இந்த நிலையில் பூகம்ப இடிபாடுகளிலிருந்து 11 வயது சிறுமியை இராணுவத்தினர் மீட்டுள்ளனர். கடந்த 8 நாட்களாக அந்தச் சிறுமி இடிபாடுகளுக்கிடையே சிக்கித் தவித்துக் கொண்டிருந்தாள். போலியோவால் பாதிக்கப்பட்ட அந்தச் சிறுமி கடும் குளிர் மற்றும்மழையில் வாடி மயங்கியநிலையில் கிடந்தார்.

# சதாமுக்கு எதிராக சாட்சியமளிக்க ஈராக் முன்னாள் பிரதமர் சம்மதம்!



பாக்தாத்—

ஈராக் முன்னாள் ஜனாதிபதி சதாமுக்கு எதிரான வழக்கில் அவரது நம்பிக்கைக்குரிய தளபதியும், முன்னாள் துணைப் பிரதமருமான தாரிக் அஜீஸ் சாட்சியமளிக்க சம்மதித்துள்ளாார்.

இந்தத் தகவலை அஜீஸின் சட்டத்தரணியும், அமெரிக்க அதிகாரிகளும் தெரிவித்தனர்.

ஈராக் முன்னாள் ஜனாதிபதி சதாம்மீது 1982 ஆம் ஆண்டு நடந்த கொலை முயற்சிக்குப் பழிவாங்கும் விதமாக 143 பேரைக் கொன்று குவித்ததாக வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

ஈராக் தலைநகர் பாக்தாத்தில் உள்ள சிறப்பு நீதிமன்றில் நடந்து வரும் இந்த வழக்கு விசாரணையில் சதாமுக்கு எதிராக அவரது ஆட்சியில் துணைப் பிரதமராக இருந்த தாரிக் அஜீஸ் வாக்குமூலம் அளிக்கச் சம்மதித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை நடந்த விசாரணையின்போது அஜீஸ் தனது சம்மதத்தைத் தெரிவித்ததாக அவரின் சட்டத்தரணி படியா இஜாத் ஆரீப் மற்றும் அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதுகுறித்து லண்டனிலிருந்து வெளியாகும் நாளிதழுக்குப் பேட்டியளித்த அஜீஸின் சட்டத்தரணி ஆரீப் கூறியதாவது -

சதாமின் நம்பிக்கைக்குரியவராகவும் , ஈராக்கின் துணைப் பிரதமராக்கவும் இருந்ததால் படுகொலைச் சம்பவம் குறித்த முழு விபரங்களும் அஜீசுக்கும் தெரியும். அமெரிக்க அதிகாரிகள் 300 முறை விசாரணை நடத்தியபிறகு அவர் இந்த முடிவுக்கு வந்துள்ளார். சாட்சியாக மாறியதால் அஜீசுக்கு இந்த வழக்கில் மூன்று வருடங்கள்வரை தண்டனை கிடைக்கலாம்.

வழக்கிலிருந்து விடுதலை அடைந்ததும் இந்தச் சம்பவம் குறித்து முழுமையான தகவல்களுடன் ஒரு புத்தகம் எழுதுவேன் என்று அஜீஸ் என்னிடம் கூறினார். மேலும் ஈராக்கில் தங்கினால் சதாம் ஆதரவாளர்கள் தன்னைத் தாக்கக்கூடும் என்பதால் தனக்கு ஐரோப்பிய நாடுகள் விசா வழங்கவேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார் என அவர் மேலும் தெரிவித்தார்.

# இந்திய - ரஷ்ய இராணுவ பயிற்சியில் விபத்து; ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர் உயிர் தப்பினார்!

பிகானீர்—

இந்திய - ரஷ்ய கூட்டு இராணுவப் பயிற்சியின்போது எதிர்பாராத விதமாக ஏற்பட்ட விபத்தில் ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர், இந்திய விமானப் படைத் தளபதி மற்றும் அதிகாரிகள் உயிர்தப்பினர்.

இந்திய - ரஷ்ய இராணுவத்தினருக்கிடையேயான கூட்டுப் பயிற்சி ராஜஸ்தானில் உள்ள மகாஜன் ரேஞ்சில் நடைபெற்றுவருகிறது. நேற்றுமுன்தினம் மாலை டாங்கிகளைத் தாக்கும் மிலன் ஏவுகணைகளைக் கொண்ட நான்கு ஜீப்கள் விமானங்கள் மூலம் கீழே இறக்கப்படும் பயிற்சி நடைபெற்றது. நான்கில் ஒரு ஜீப் வானத்தில் இருந்து கீழ்நோக்கி வரும்போது திடீர் காற்றால் பார்வையாளர்கள் அமர்ந்திருந்த இடத்துக்கு அருகே தள்ளப்பட்டது.

பார்வையாளர்கள் மேடையில் - ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர் செர்கெய் இவானோவ், இந்திய விமானப்படைத் தளபதி எஸ்.பி.தியாகி, ரஷ்ய தூதுவர் துருப் நிகோவ் உள்ளிட்ட முக்கிய அதிகாரிகள் அமர்ந்திருந்தனர்.

ஜீப் தங்களை நோக்கிவரும் போது துல்லியமாகக் கவனித்துவிட்ட அதிகாரி ஆர்.எஸ்.சுஜ்லானா, அனைவரையும் உஷார்படுத்தியதில் உடனடியாக அனைவரும் பாதுகாப்பாக மேடையைவிட்டுக் கீழே இறங்கினர். இதனால் அனைவரும் பாதுகாப்பாக உயிர் தப்பினர். ஜீப் மேடை மீது மோதியிருந்தால் மிகுந்த பாதிப்பு ஏற்பட்டிருக்கும்.

பயிற்சியளவில் வீரர்கள் வாகனங்களை குறிப்பிட்ட இலக்கில் இறக்கியதற்குப் பாராட்டவேண்டும். அருகில் இருந்து பார்க்கவேண்டும் என்பதற்காகத்தான் மேடை அமைக்கப்பட்டது. விதிப்படி இரண்டு கி.மீ.தள்ளித்தான் மேடை அமைக்கப்படவேண்டும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

## உலக நோக்கு

# நவீன ஆயுத தொழில்நுட்பங்களை இந்தியாவுக்கு, ரஷ்யா வழங்கவுள்ளது!

புதுடெல்கி—

நவீன ஆயுத தொழில் நுட்பங்களை இந்தியாவுக்கு வழங்க ரஷ்யா தயாராகவுள்ளதுடன், இந்த ஆண்டு இறுதிக்குள் இரு நாடுகளுக்கிடையே இராணுவ அறிவுசார் ஒப்பந்தம் கையெழுத்தாகிவிடும் என்று -ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர் செர்கேய் இவானோவ் தெரிவித்தார்.

டெல்கி வந்துள்ள இவானோவ் நிருபர்களிடம் கூறியதாவது -

இந்தியாவுக்கு நவீன ஆயுத தொழில்நுட்பங்களைப் வழங்க ரஷ்யா தயாராக உள்ளது. எதிர்காலத்தில் இரு நாடுகளும் இராணுவ தொழில்நுட்பங்களைப் பரிமாறிக் கொள்வதற்கு வழிவகுக்கும் இராணுவ அறிவுசார் சொத்துரிமை ஒப்பந்தம் இந்த ஆண்டில் முடிவுசெய்யப் பட்டுவிடும்.

தற்போது ரஷ்ய இராணுவத்துடன் கூட்டுப் பயிற்சிகள் நடத்திவரும் இந்தியா, எதிர்காலத்தில் சீன இராணுவத்துடனும் கூட்டுப்பயிற்சி மேற்கொள்ளும். ஷாங்காய் அமைப்பின் பிறவுறுப்பு நாடுகளான உஸ்பெகிஸ்தான், கஜகஸ்தான், தஜிகிஸ்தான் மற்றும் கிர்கிஸ்தான் ஆகியவற்றுடனும் கூட்டுப் பயற்சிகள் நடத்த வாய்ப்பு உள்ளதெனவும் அவர் தெரிவித்தார்.

# ஆர்ஜென்ரீன சிறையில் கைதிகள் கலகம்; பொலிஸார் சுட்டதில் 32 பேர் பலியாகினர்!

பியோனஸ்—


ஆர்ஜென்ரீனா தலைநகர் பியோனஸ் அயர்ஸ் நகரை அடுத்துள்ளது மக்டாலினா நகரம். இங்குள்ள சிறையில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கைதிகள் உள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு இந்த சிறையில் திடீர் கலவரம் ஏற்பட்டது. கைதிகளை பார்க்கவரும் பார்வையாளர்களுக்கு நீண்டநேரம் ஒதுக்க வேண்டும் என்று கைதிகள் வற்புறுத்தி வந்தனர். ஆனால், இதைச் சிறைக் காவலாளிகள் ஏற்கவில்லை. இதைத் தொடர்ந்து கைதிகள் கலவரத்தில் ஈடுபட்டனர்.

கைதிகளைப் பார்க்க வந்தவர்களும் வன்முறையில் ஈடுபட்டனர். இதனால் பொலிஸாருக்கும், கைதிகளுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. கலவரத்தில் ஈடுபட்ட கைதிகள் சிறைக்கு தீவைத்தனர். கையில் கிடைத்த பொருட்களை தீயில் போட்டு எரித்தனர். இதை தொடர்ந்து விஷவாயு பரவியது.

இந்த மோதலில் தீயில் கருகியும், பொலிஸார் துப்பாக்கியால் சுட்டதிலும் 32 கைதிகள் பலியானதுடன் - 100 இற்கும் மேற்பட்ட கைதிகள் காயமடைந்தனர்.

வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட கைதிகளில் பலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகத் தெரியவருகிறது.



சீனா - விண்வெளிக்கு ஷென்சோவ் -6 என்ற விண்கலத்தை அனுப்பியது. இந்த விண்கலத்தில் பீ ஜுனிலாங், நீ ஹெய் செங் என்ற 2 விண்வெளி வீரர்களும் சென்றனர். 5 நாட்கள் விண்வெளியில் சுற்றிவிட்டு 2 வீரர்களும் அந்த விண்கலத்தில் நேற்று முன்தினம் காலை பூமிக்குத் திரும்பினார்கள்.

சிசிவாங் தளத்தில் இறங்கிய அந்த 2 வீரர்களும் வெற்றிக் களிப்பில் கை அசைக்கும் காட்சி.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# இலங்கை - இந்தியா இடையே நீருக்கடியில் கேபிள் தொடர்பு!

## உடன்பாடு கைச்சாத்தானது

கொழும்பு—

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே நீருக்கடியிலான தொலைத் தொடர்பு கேபிள் இணைப்பு உடன்பாடு கைச்சாத்திடப்பட்டுள்ளது. இந்தியாவின் வி.என்.என்.எல் நிறுவனமும், சிறிலங்கா ரெலிகொம் நிறுவனமும் இந்த உடன்பாட்டில் கைச்சாத்திட்டுள்ளன.

800 மில்லியன் ரூபா செலவில் 325 கிலோ மீற்றர் நீளமான இந்த கேபிள் இணைப்புத் திட்டத்தின் மூலம் தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் இடையில் தொடர்பு ஏற்படுத்தப்படும்.

8 மாதங்களுக்குள் பூர்த்தியாகத் திட்டமிடப்பட்டுள்ள இந்த கேபிள் இணைப் புத் திட்டத்தின் மூலம் 20 ஜி.பி.எல் வலுவுடைய குரல், தகவல், வீடியோ தொடர்பாடலை மேற்கொள்ளமுடியுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

### அபிவிருத்தி....

புதிய அரசின் அமைச்சரவையில் 10 ஆண் அமைச்சர்களும், 09 பெண் அமைச்சர்களும் இடம்பெற்றுள்ள னர். தொழிற்கட்சியைச் சேர்ந்த பத்துப்பேரும், சோசலிச இடதுசாரிக் கட்சியைச் சேர்ந்த 5 பேரும், அக்ரேரியன் கட்சியைச் சேர்ந்த நால்வரும் அமைச்சர்களாக நியமிக்கப்பட்டனர்.

இந்த அமைச்சரவையில் இடம் பெற்றுள்ள எரிக்சொல்ஹெய்முக்கு அபிவிருத்தித்துறை அமைச்சர் பதவி வழங்கப்பட்டுள்ளது. புதிய நோர்வே வெளிவிவகார அமைச்சராக ஜொனாஸ் க‌ஸ்ரோர் நியமிக்கபபட்டுள்ளார்.

### மகிந்தவின்...

தெரிவிக்கவேண்டும். அவர் தெரிவிக்காத நிலையில், விடுதலைப் புலிகள் தனிநாட்டைப் பெறும்நிலை உருவாகும் என்பதனை மறந்துவிடக்கூடாது.

போர்நிறுத்தம் தொடர்பான ஏற்பாட்டை நாம் மேற்கொண்டதால்தான் இன்று அரசு பல கோடிக்கணக்கான ரூபாவைச் சேமிக்க முடிந்தது என்பதையும் மறந்துவிடக்கூடாது.

திருகோணமலை மாவட்டத்தைப் பொறுத்தவரை இங்கு அழகான இயற்கைத் துறைமுகம் உள்ளது. பாரிய எண்ணெய்க்குதங்கள் உள்ளன. தொழில் வளங்கள் பெருமளவில் உள்ளன.

இவற்றைக்கொண்டே சிறந்த தொழிற்பேட்டையினையும் உருவாக்கமுடியும். ஆனால், நிரந்தர சமாதானம் ஏற்படுவதன் மூலமே இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

இந்த நாட்டிலே வாழ்கின்ற முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளைப் பொறுத்தவரை கூட நாம் எந்தவித பாதிப்புமற்ற நிலையில் செயற்படுவோம். ஒரு சில சந்தர்ப்பங்களில் முஸ்லிம்கள் எம்மை குற்றம் சாட்டினாலும் எவருக்கும் பாரபட்சமான நிலையில் நாம் நடந்துகொள்ளமாட்டோம். நியாயமாகவும் நீதியாகவும் செயற்படுவோமெனத் தெரிவித்தார்.

### புலிகளின்..

இன்று ஐ.தே.கட்சி தனது வெற்றி குறித்துப் பேசுகிறது. எனினும் அதன் உண்மை நிலை என்னவென்பது பற்றி எதிர்வரும் நவம்பர் 18 ஆம் திகதி அறிந்துகொள்ள முடியும். ரணிலின் வெற்றியைத் தீர்மானிப்பது விடுதலைப் புலிகளா அல்லது சாதாரண பொது மக்களா என்பதை நவம்பர் 17 ஆம் திகதி அறிந்துகொள்ள முடியும் என அவர் மேலும்தெரிவித்தார்.

### 12 நீர்த்...

மேலதிக பொலிஸ் இயக்குநர் சிறிவத்சவா உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் - கிருஷ்ண ராஜசாகர், கபினி, ஹரங்கி, ஹேமாவதி, சுதாபிரபா, மலபிரபா, துங்கப் பிரபா, பத்ரா, லிங்கனா மக்கி, சுபா, அலமதி, நாராயணபுர ஆகிய அணைக்கட்டுக்களுக்கு ஆயுதப் படை மற்றும் பொலிஸ் பாதுகாப்பு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த அணைக்கட்டுகளின் பாதுகாப்பில் ஈடுபடும் பொலிஸாருக்கு ஆயுதங்களை வாங்குவதற்கு 4 கோடி ரூபாவை ஒதுக்குவதற்கு கர்நாடக அரசு தீர்மானித்துள்ளது.

### யாழ்.குடாநாடு...

தனியார் வாகனங்களை பெற்றுக் கொள்ள வேண்டியேற்படு மென தேர்தல் திணைக்களம் கணக்கிட்டுள்ளது.

குறிப்பாக விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வாக்காளர்களை இராணுவ சோதனைச் சாவடிகளில் அமைக்கப்படவுள்ள வாக்களிப்பு நிலையங்களுக்குக் கொண்டு செல்வதற்கான போக்குவரத்து வசதிகளை செய்யவேண்டியுள்ளதாலும், இந்தப் பிரதேசத்தின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் வாகன வசதிகளை வழங்க வேண்டியுள்ளதாகவும் தேர்தல் திணைக்களப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (தே)

# இங்கிலாந்து காகிதங்களிலே அச்சிடப்படும் வாக்குச்சீட்டுகள்!

கொழும்பு—

ஜனாதிபதித் தேர்தல் வாக்குச்சீட்டு அச்சிட இங்கிலாந்து அரச பிரதி நிதிகளின் விசேட கண்காணிப்பின் கீழ் தயார் செய்யப்பட்ட பல விசேட இரகசிய பாதுகாப்பு அடையாளங்களைக் கொண்ட 75 தொன் காகிதங்கள் பயன்படுத்தப்பட்டதாக அரசாங்க அச்சக வட்டாரங்கள் தெரிவித்தன.

தேர்தல் வாக்குச் சீட்டுக்களுக்கெனக் கொண்டு வரப்பட்ட காகிதங்கள் கடந்த தேர்தல் காலங்களில் பயன்படுத்தப்பட்டவையை விட மாறுபட்டவை. இதில் விசேட பல அடையாளங்கள் இருப்பதனால் வாக்குச் சீட்டுக்களில் மோசடிகளைச் செய்ய முடியாது.

மோசடி மேற்கொள்ளப்படுமானால் அதனை இலகுவில் கண்டுபிடிக்க முடியும். இந்த விசேட ரக காகிதங்கள் முதன்முறையாக இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இந்தக் காகிதங்களின் ஒரு தொன்னின் விலை மூன்றரை லட்சம் ரூபாவாகும்.

இங்கிலாந்து அரச பிரதிநிதிகளின் கண்காணிப்பின் கீழேயே இந்த வெள்ளை நிறக் காகிதங்களில் பாதுகாப்பு அடையாளங்கள் இடப்பட்டுள்ளன. இந்தக் காகிதங்களில் இதுவரை 14 மாவட்டங்களுக்கான வாக்குச் சீட்டுகள் அச்சிடப்பட்டுள்ளதாக தேர்தல் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## இன்னொரு கப்பலும் சோமாலியாவில் கடத்தல்!

கொழும்பு—

இலங்கையரான கப்டன் ஒருவருடன் இன்னொரு கப்பல் ஆயுதக்குழுவொன்றால் சோமாலியாவில் கடத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையரான ஏ.எச்.ஈ.சில்வாவை கப்டனாகக் கொண்ட கப்பலே சோமாலியாவுக்கு அருகிலுள்ள கடற்பகுதியில் வைத்துக் கடத்தப்பட்டது.

இதில் 9 கொரிய மாலுமிகளும் பணியாற்றுகின்றனர். சொலமன் துறைமுகத்தில் வைத்தே இந்தக் கப்பல் கடத்தப்பட்டது.

முன்னரும் ஒரு கப்பல் சோமாலியாவில் இலங்கை கப்டனுடன் கடத்தப்பட்டு 100 நாட்களின் பின்னர் விடுவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## தேர்தலைக் கண்காணிக்கும் பணியில் 12 வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள்!

கொழும்பு—

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் முழுமையான கண்காணிப்பை மேற்கொள்வதற்காக வந்த 12 வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் 16 மாவட்டங்களில் தமது நடவடிக்கையை ஆரம்பித்திருப்பதாக பவ்ரல் அமைப்பின் பணிப்பாளர் கிங்ஸ்லி றொட்றிக்கோ தெரிவித்தார்.

காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, அம்பாறை, மொனராகலை, களனி, கேகாலை, மாத்தளை, குருனாகல், புத்தளம், அனுராதபுரம், கொழும்பு, கம்பஹா, களுத்துறை, யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் இந்தக் கண்காணிப்பாளர்கள் கண்காணிப்பு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

அமெரிக்கா, கனடா, நெதர்லாந்து, இங்கிலாந்து, புருண்டி, ஜப்பான், தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளிலிருந்து இந்த கண்காணிப்பாளர்கள் வந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் மற்றும்அம்பாறை ஆகிய இரண்டு மாவட்டங்களில் நிரந்தர கண்காணிப்பாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மற்றையவர்கள் நடமாடும் கண்காணிப்பாளர்களாக தமது நடவடிக்கைகயை மேற்கொள்ளவுள்ளனர். (தே)

### கல்வி....

வெளியிட்டமைக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன் நாளை முதல் கல்விச் செயற்பாடுகளைத் தொடருமாறும் கேட்டுள்ளது.

## சுனாமி மீளமைப்புக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி 2 மில்லியன் டொலர் நிதியுதவி!

கொழும்பு—

சுனாமி மீளமைப்புக்காக ஆசிய அபிவிருத்தி வங்கி 2 மில்லியன் டொலர் நிதி உதவி அளித்துள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மின்சாரம் மற்றும் குடிநீர் தேவைகளை நிறைவு செய்ய இந்த நிதியை ஆசிய அபிவிருத்தி வங்கி ஒதுக்கீடு செய்துள்ளது.

புனரமைப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ள அரச சார்பற்ற நிறுவனங்கள் இது தொடர்பிலான பயனாளிகளை அடையாளம் கண்டு உதவுவர் என்றும் அபிவிருத்தி வங்கி தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான சுனாமி மீளமைப்புப் பணிகளுக்காக 150 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவியையும், 7 மில்லியன் அளவிலான கடனுதவியையும் ஆசிய அபிவிருத்தி வங்கி ஏற்கனவே அளித்துள்ளது.

இந்தத் தொகையானது சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சமூக உட்கட்டமைப்புகள், பொதுச் சேவைகள், வாழ்வாதரங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது.

## ஆயுதங்கள் வைத்திருந்த நால்வர் வவுனியாவில் கைது!

வவுனியா—

வவுனியா செட்டிக்குளம், புதுக்குளம் பிரதேசங்களில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போது அனுமதிப்பத்திரமற்ற துப்பாக்கிகளை வைத்திருந்த நால்வர் கைது செய்யப்பட்டனர்.

இந்தப் பிரதேசங்களில் ஆயுதங்களைக் காண்பித்து மக்களிடம் கப்பம் பெறல், மக்களை அச்சுறுத்துதல் ஆகிய சம்பவங்கள் அடிக்கடி நடைபெறுவதாக பொலிஸ்மா அதிபருக்கு புகார்கள் கிடைத்ததையடுத்து இந்தச் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

பொலிஸ்மா அதிபரின் உத்தரவிற்கமைய செட்டிக்குளம் பொலிஸார் நேற்று முன்தினம் தேடுதல் நடத்தியபோது அனுமதிப்பத்திரமற்ற 4 துப்பாக்கிகளைக் கைப்பற்றியுள்ளதுடன் நால்வரை கைது செய்தனர்.

## பேலியகொடையில் மோதல் இரண்டுபேர் உயிரிழப்பு!

கொழும்பு—

பேலியகொடையில் நேற்று முன்தினம் இரவு இரு குழுவினருக்கு இடையே ஏற்பட்ட மோதலில் இருவர் உயிரிழந்தனர்.

பேலியகொடை இம்புட்டுவெல் கொட பிரதேசத்திலுள்ள மரண வீட்டிற்கு வந்த நபர் நேற்று முன்தினமிரவு வீட்டிற்கருகிலுள்ள மதுபான சாலைக்கு மதுஅருந்தச் சென்றபோது அவருக்கும் அங்கிருந்தவர்களுக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

இதனையடுத்து அந்தநபர் தன் வசமிருந்த துப்பாக்கியால் வானை நோக்கி சுட்டுள்ளார். அவரைக் கட்டுப்படுத்த சென்ற நபரொருவர் மீதும் துப்பாக்கிச் சூடு நடத்தியதில், துப்பாக்கிச் சூடுபட்டவர் சம்பவ இடத்திலேயே பலி யானார்.

இதனையடுத்து பிரதேச வாசிகளுக்கும், மரணவீட்டிற்கு வந்தவர்களுக்குமிடையில் ஏற்பட்ட மோதலில் வெட்டுக் காயங்களுக்கு இலக்காகி நால்வர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களில் ஒருவர் உயிரிழந்தார். தற்போது மூவர் அங்கு சிகிச்சை பெற்றுவருகின்றனர். சம்பவம் தொடர்பாகப் பேலியகொடை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### மரண தண்டனை...

பிலவேந்திரன், மற்றும் இளைஞர் காங்கிரஸ் தலைவர் மனீந்தர்சிங் பிட்ட மீது வெடிகுண்டு வீசிய வழக்கில் சீக்கியர்களுக்கான தனிநாடு கோரும் காலிஸ்தான் விடுதலை முன்னணியைச் சேர்ந்த் தேவிந்தர் சிங் புல்லார் ஆகியோரும் மரண தண்டனையை ரத்துச் செய்யக்கோரி கருணை மனு அளித்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.

கருணை மனுக்களை பரிசீலனை செய்ய இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம், இது தொடர்பாக பல்வேறு யோசனைகளை இந்திய அரசுக்குத் தெரிவித்தார்.

அதில் மரண தண்டனையிலிருந்து முருகன், பேரறிவாளன், சின்னசாந்தன் ஆகியோருக்கு மன்னிப்பு வழங்கலாம் என்று யோசனை தெரிவித்துள்ளார். இதுபோல் மற்ற மரண தண்டனைக் கைதிகளுக்கு மன்னிப்பு வழங்குவது குறித்துப் பரிசீலனை செய்யுமாறும் கூறியுள்ளார்.

மரண தண்டனை விதிக்கப்பட்டோர் அனுப்பிய கருணை மனுக்கள் இந்திய உள்துறை அமைச்சு மூலம் இந்திய ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டன. 8 ஆண்டுகளுக்கு மேலாக அவை பரிசீலனையிலிருந்து வந்தது.

இந்த மனுக்கள் குறித்து மறுபரிசீலனை செய்யுமாறு கடந்த மாதம் உள்துறை அமைச்சுக்கு இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம் பரிந்துரை செய்திருந்தார். ஆனால் அனைத்து மனுக்கள் மீதும் பரிசீலனை முடிவுற்ற நிலையில் இந்திய அரசின் முடிவில் மாற்றம் இல்லை என்றும், இந்த மனுக்கள் ஜனாதிபதியின் பொது மன்னிப்புக்குத் தகுதியற்றவையாக உள்ளன என்றும் இந்திய அரசு தெரிவித்துவிட்டது.

இதையடுத்து உள்துறை அமைச்சர் சிவராஜ் பட்டேலுக்கு ஜனாதிபதி அப்துல் கலாம் மீண்டும் கடிதம் எழுதினார்.

அதில் கருணை மனுக்கள் அனைத்தும் நீண்ட நாட்களாக நிலுவையில் உள்ளன. மரண தண்டனைக் கைதிகளை கருணை அடிப்படையில் பரிசீலனை செய்து அவர்கள் வாழ்வதற்கான முயற்சியில் ஈடுபட வேண்டும். அவர்களுக்கு ஆலோசனை நடத்தி ஆன்மீக வழிபாட்டு நெறிகளைப் போதிக்க வேண்டும்.

மரண தண்டனைக் கைதிகளில் ஒருவருக்கு 75 வயதாகிவிட்டது. அவர் விடுதலை செய்யப்பட்டால் எந்தவிதமான குற்றச் செயல்களிலும் ஈடுபடுவதற்கான வாய்ப்பு இல்லை. எனவே இதுபோன்ற கைதிகளை சுமையாகக் கருதாமல் மனித சொத்தாகப் பாவித்து நல்வழிப்படுத்த அரசு முயற்சி மேற்கொள்ளவேண்டும். இவர்கள் வாழ்வின் மீதியாகவுள்ள நாட்களைத் தங்கள் குடும்பத்தினருடன் சேர்ந்து வாழ அனுமதிக்க வேண்டும் எனக் குறிப்பிட்டிருந்தார்.

கருணை மனுவை உள்துறை அமைச்சு தகுதியற்றவை என்று கூறி ஏற்க மறுத்துவிட்ட நிலையில் இந்திய ஜனாதிபதி கடிதம் எழுதியுள்ளதால் கருணை மனுக்களை இந்திய அரசு நிராகரித்துவிட வாய்ப்பில்லை என்று கூறப்படுகிறது. இதனால் கருணை மனுவை பரிசீலிப்பது குறித்து ஆலோசித்து வருகிறது.

## மரண அறிவித்தல்

### திருமதி மேரி றெஜீனா இம்மனுவேல்

(இளைப்பாறிய ஆசிரியை - சில்லாலை)



சில்லாலை பண்டத்தரிப்பை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட, மேரி றெஜீனா இம்மனுவேல் அவர்கள் 15-10-2005 அன்று காலமானார்.

அன்னாரின் இறுதி நிகழ்வுகள் 19-10-2005 புதன்கிழமை மாலை 3 மணிக்கு அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று இறுதி வழிபாட்டின் பின் பூதவுடல் சில்லாலை கதிரைமாதா ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு, திருப்பலியின் பின்னர் கதிரைமாதா சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அருட்பணி A.C.கிறிஸ்ரோப்பர்
(மைத்துனர்)

சில்லாலை,
பண்டத்தரிப்பு. (C/4735)

இப்பத்திரிகை இல.267 ,நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 18.10.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.